GOKULAM
ஜூலை 2009 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1101


1102


1103


1104


1105


1106


1107


1108


1109


1110


1111


1112


1113



1114


1115


1116


1117


1118


1119


1120


1121


1122


1123


1124


1125

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

ஜூலை 2009 மலர் : 27 இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

தினசரி லிஸ்ட்; எப்பவும் பெஸ்ட்!



டியர் குட்டீஸ்...

பள்ளி திறந்து, வகுப்புகள் ஆரம்பித்திருக்கும் தருணம் இது! இந்த ஆண்டு நீங்கள் என்ன சாதிக்க நினைக்கிறீர்கள்? வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுவது; பள்ளியில் முதல் மாணவனாக விளங்குவது; விளையாட்டுகளில் பரிசுகளை வெல்வது... இப்படியொரு திட்டத்தை நீங்களே அமைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளில், உறங்கும் நேரம் தவிர - பள்ளிக்கான நேரத்தை விலக்கி, மீதமுள்ள நேரத்தை கணக்கிடுங்கள். அந்த நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது?

- வீட்டுப் பாடத்தைச் செய்வதற்கு
- அன்றைய பாடங்களைப் படிப்பதற்கு
- எந்தப் பாடம் கடினமாக இருக்கிறதோ, அதில் கூடுதல் கவனம் செலுத்திப் பயில்வதற்கு
- போட்டிகளில் பங்கேற்கப் பயிற்சி எடுப்பதற்கு...
- உடற்பயிற்சிக்கு; ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகைகளில் செலவழிப்பது...

இப்படி ஒரு பட்டியல் போடுங்கள். அதில் எழுதியவற்றை அன்றிரவு படுக்கும் முன்பு முடித்து விட்டீர்களா என்று குறித்துக்கொள்ளுங்கள்.

எவை முடியவில்லையோ, அவற்றை மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளோடு குறித்து கொண்டு, அவற்றை அடுத்த நாளில் நிறைவு செய்யுங்கள்.

இப்படி திட்டமிடும் பழக்கமும், அதை குறிப்பிட்டபடி நிறைவேற்றும் பழக்கமும் அமைந்துவிட்டால், உங்களின் பள்ளிக் காலம் மட்டுமல்ல; வாழ்க்கையே சுலபமாகவும், வெற்றியாகவும் விளங்கும். இதுதான் வெற்றியின் அடிப்படை!



அன்புடன்,
கோகு.

உலகில் மிகவும் சரியாக தட்பவெப்ப நிலையை அறிந்து கொள்ளும் பறவை 'பிரஷ் துருக்கி' என்ற பறவைதான். பெண் பறவை ஒரு மண்மேட்டை உருவாக்கி, அதைச் சுற்றிலும் முட்டையிடும். இந்தச் சுமார் ஒரு மீட்டர் உயரமும் 4-5 மீட்டர் சுற்றளவும் கொண்டதாக இருக்கும் அதிக பட்சம் 180 கிராம் இருக்கும்.முட்டையை சரியாக 33 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் இவை பாதுகாக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வெளி வர ஆறு மாதங்கள் ஆகும். இந்த ஆறு மாத காலமும் மண்மேட்டின் வெப்ப நிலையை இரவும், பகலும், கோடை மற்றும் குளிர் காலங்களிலும் ஒரே சீராக பாதுகாத்துக் கொள்ள மண்மேட்டில் காற்றுத் துளைகளைப் போட்டும் வெப்பம் அதிகமாகிவிட்டால் முட்டையை குளிர்ந்த மணலால் மூடியும் பாதுகாக்கும். இந்தப் பணியை ஆண்பறவை மேற்கொள்ளும்.

தன் தலையாலோ, பாதங்களாலோ அல்லது அலகாலோ இந்தத் தட்பவெப்பநிலை மாற்றத்தை உணரும் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் இதற்கான சாத்தியக்கூறுகள்

தெர்மா



விந்தை!

இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. முட்டைகளைப் பாதுகாக்க, குட்டித் தூக்கம் போடும் குழுக்களை இப்பறவைகள் ஏற்படுத்துகின்றன. அவை இரவும் பகலும் முட்டைகளைக் கண்காணிக்கின்றன.

மரங்களிலிருந்து விழும் இலை பழம் போன்ற பாகங்களை உணவாக உட்

மீட்டர் பறவை!



கொள்ளும் இந்த 'தெர்மா மீட்டர்' பறவை!

- எஸ். ஜாணு,
உ.எண்.286,
கமலாவதி மேல்நிலைப் பள்ளி,
சாகுபுரம்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
tamilgokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

குண்டுப் பெண்!

சீனாவைச் சேர்ந்தவர் 'ஹோ கூயிங்'. தற்போது 65 வயது நிரம்பிய இந்தப் பெண்மணி இடைவிடாத தலை வலிக்காக மருத்துவரைப் பார்க்கச் சென் றார். அப்பொழுது, காதுக்கருகில் 3.3 செ.மீ குண்டு புதைந்திருப்பது எக்ஸ்ரேயில் கண்டுபிடிக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற கலாச்சார புரட்சியின் போது, தன் தலைக்கு மேலே குண்டு பறந்து சென்றதை நினைவு கூர்ந்தார் அவர். இப் பொழுதுதான் தெரிகிறது, பறந்து வந்த குண்டு முகத்தில் மறைந்திருக்கிறது. அறுவை சிகிச்சை செய்து குண்டை அகற்றியபின், 'ஹோ கூயிங்'கின் தலைவலி பறந்தே போச்சு.



வயிற்றில் முளைத்த



ரஷ்யாவைச் சேர்ந்தவர் 28 வயதான 'ஆர்டியோம் சிடோர் கின்'. இவர் நெஞ்சு வலியால் துன்புற்றார். இருமலின்போது இரத்தமும் வந்தது. எக்ஸ்ரேயில் நெஞ்சுக்குள் கட்டி இருப்பது போலத் தெரிந்தது. எனவே அறுவை சிகிச்சை செய்வதுதான் வழி என்று முடிவானது. அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் 'விளாதிமிர் கம்சேவ்' ஆச் சர்யத்தில் ஆழ்ந்தார். ஏனென்றால், அவர் அறுவை சிகிச்சை செய்து அகற்றியது சிறிய 'பிர்' (Fir) மரக்

-முனைவர் ஆசுரா

கன்றை. 'சிடோர்கின்' சுவாசிக்கும் போது சிறிய விதை உள்ளே சென்று, அங்கே முளைத்திருக்கலாம் என மருத்துவர் குழு தெரிவித்துள்ளது.



செடி!

'டேகா சுகி!'

மரத்து மேல ஏறி டீ குடிக்கிறதா? இது என்ன கலாட்டான்னு கேட்குறீங்களா? வழக்க மான தேநீர் விடுதிகளைப் பார்த்துக் களைத்துப் போனவர்களுக்காக, இந்த ஏற்பாடு. ஜப்பானி யரான 'டேரன்பூ பியூஜிமோரே'தான் இதை அமைத்துள்ளார். இரண்டு மரங்களுக்கு இடையில் இந்த தேநீர் விடுதி அமைந்துள்ளது. இது 29 ச.அடி பரப் பளவு கொண்டது. இந்த அமைப்பை 'டேகா சுகி' என அழைக்கின்றனர். 'உயரமான இடத் தில் அமைந்த 'தேநீர் விடுதி' என்பது இதன் பொருள். பழைய ஞாபகத்துல மனு ஷங்க, மீண்டும் மரம் ஏறிப் போறாங்களான்னு கேட்காதீங்க?!



மிகப் பெரிய கூட்டுப்பூ

பொதுவாக வாழைப்பூ, காலிபிளவர் ஆகியவற்றை 'கூட்டுப் பூ' வகையில் சேர்ப்பாங்க. அதாவது 'கூட்டு' என்பது, பல பூக்களால் இணைந்து கூடியிருப்பது என்று சொல்லலாம். அந்த வகையில் மிகப் பெரிய பூவாக விளங் குவது 'டைட்டன் ஆரம்' (Titan arum). ஆங் கிலத்தில் 'இன்ஃப்ளோரசன்ஸ்' என்றும், தமிழில் மஞ்சரி எனவும் குறிப்பிடுவர். பிளவுபடாமல் ஒரே அமைப் பாக வளரும், 'டைட்டன் ஆரம்' ஜெர்மனியில் உள்ள வில்ஹெல்மா பூங்காவில் 9 அடி 6 இஞ்ச் உயரத்துக்கு வளர்ந்துள்ளது. ○

வாழ்க்கையை சுவாரஸ்யப்படுத்துபவை விழாக்கள்தான். மற்றவர்களோடு சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வது; உறவுகளை புதுப்பித்துக்



கொள்வது; வாழ்த்துகளைச் சொல்லி நெருக்கங்களை அதிகப்படுத்திக் கொள்வது... இப்படி விழாக்கள் அனைத்துமே நடைமுறை வாழ்வில் நாம் காணும் நல்ல அடையாளங்கள்!

உழவின் சிறப்பைப் போற்றும் பொங்கல்; விநாயக சதுர்த்தி; கிருஷ்ண ஜெயந்தி; நவராத்திரி; தீபாவளி... ஆகிய இந்துப் பண்டிகைகள் என்றாலும் சரி; ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்துமஸ், ஈஸ்டர், ஹோலி... போன்ற மற்ற பண்டிகைகள் என்றாலும் சரி; அதன் அடிநாதமாக அமைந்திருப்பவை தூய்மையும், பக்தியும்தான்!

இல்லங்களை தூய்மைப்படுத்துதல் என்பதன் மூலம் சுகாதாரத்தையும், நோன்பு என்னும் நிலையில் உடலின் ஆரோக்கியத்தையும், வழிபாடு என்னும் முறையில் மன

பண்டிகை

ஒருமைப்பாட்டையும் அளிக்கும் விதத்தில் அமைந்திருக்கின்றன இந்தப் பண்டிகைகள் அனைத்தும்!

உணவுப் பொருள் வாங்குவது முதல் பிறருக்கு அளிப்பதற்கான பரிசுப் பொருள் வாங்குவதுவரை, பலவிதமான செலவுகள் இதனால் ஏற்படலாம். ஆனால், இவைதான் மனிதனுக்குள்ளே உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் அம்சங்கள்.

பிறருக்குக் கொடுப்பது என்கிற எண்ணமும், அதனால் உண்டாகும் ஆனந்தமும் அனுபவப்பட பண்டிகைகள் நல்ல வாய்ப்பு.

தொழில் நிறுவனங்களின் நடைபெறும் வியாபாரம், அதனால் அதில் பணியாற்றுபவர்களுக்கான போனஸ், பல கடைகளின் விற்பனை... எல்லாம் இந்த விழாக்களின்போது உண்டாகும் பொருளாதாரச் சுழற்சி!

மாவிலைத் தோரணம்,

கோலாகலம்!

அறுகம்புல், மண்ணால் ஆன விநாயகர் சிலை...உட்பட இவைகளை விற்று வாழும் மக்களையும் கவனிக்கின்றன இந்த விழாக்கள் என்று பார்த்தால், பண்டிகைகள் மிகப் பெரிய மக்கள் கூட்டத்தின் அனைத்து தரப்பும் நலமுடன் வாழ வேண்டும் என்கிற அக்கறையின் பேரில் அமைந்தவை என்பது புரியும்.

எளியோருக்கு உதவுவதும் அனைவரோடும் இன்முகத்தோடு பழகுவதும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு பண்டிகைகளும் விசேஷமானவை. வாசலில் கட்டும் தோரணம் போல, கைகளில் இட்டுக் கொள்ளும் மருதாணி போல, அணிகின்ற புத்தாடை போல, பண்டிகைகளின் கோலாகலத்தை அதனால் ஏற்படுகின்ற ஆனந்தத்தை மனம் நிறைந்து அனுபவிப்போம்; அதன் உண்மையான பொருளையும் உணர்ந்து கொள்வோம்!



அட்டையில்: அக்ஷயா
அட்டை வண்ணப்படம்: ஸ்ரீஹரி

ராகவன்

அந்த விவசாயி மண்ணைக் குனிந்து பார்த்தார்; லேசாகக் கிளறினார். வேதனையுடன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு வானத்தை நிமிர்ந்து பார்த்தார்.

எப்படி இருந்த மண்? ஒருகாலத்தில், இந்த பூமியில் எதைப் போட்டாலும் விளையும். அதிகக் கவனிப்பு இல்லாமலேயே பயிர்கள் நன்றாகச் செழித்து வளரும். அறுவடை செய்து முடிப்பதற்கு முன்னால் காசு கொட்டும்; வசதிகள் பொங்கும்!

ஆனால், இப்போது இந்த பூமியின் சத்துகள் அனைத்தும் உறிஞ்சப்பட்டு விட்டன. மிச்சமிருப்பது வெறும் வறட்டு மண்தான். நெல், கோதுமை, சோளம் என்று எதை விதைத்தாலும் பிரயோஜனம் இல்லை.

இதனால், அந்த ஊர் விவசாயிகள் மிகவும் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை ஆதாரமான வயல்வெளிகள், தங்களுடைய வளத்தையெல்லாம் இழந்து வெற்று நிலமாகிவிட்டன.

'இனிமேல் நாங்கள் என்ன செய்வோம்?' விவசாயிகள் வேதனையோடு கதறினார்கள், 'இந்த வருஷம் விளைச்சல் போதவில்லை, வீட்டில் ஒரு வேளைச் சாப்பாடுகூட நிச்சயமில்லாத சூழ்நிலை. ஆண்கள், பெண்கள், வயதானவர்கள், குழந்தைகள் எல்லோரும் பட்டினி கிடக்கிறார்கள்'

இப்படிப் புலம்பிக் கொண்டிருந்த விவசாயிகளை, மற்றவர்கள் பரிதாபத்துடன் பார்த்தார்கள்,

ஒரே ஒருவர் மட்டும் அவர்களுக்காக ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று நினைத்தார். அவர் பெயர், ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர். இவர் ஓர் அறிவியல் நிபுணர்; ஆராய்ச்சியாளர்.

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர், இந்த விவசாயிகளின் நிலத்திலிருந்து மண்ணைச் சேகரித்து, பலவிதமான ஆய்வுகளைச் செய்ய ஆரம்பித்தார். இந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில், அந்த ஊர் விவசாயிகளின் வில்லன் யார் என்பது அவருக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது.



அது, பருத்தி!

எத்தனை செழிப்பான மண்ணிலும், பருத்தியைப் பயிரிட்டால் போச்சு. கொஞ்சம் கொஞ்சமாக அந்த மண்ணில் இருக்கும் நல்ல சத்துகள் எல்லாவற்றையும் பருத்தி சாப்பிட்டுவிடும். அதன்பிறகு, அங்கே எதைப் போட்டாலும் நன்றாக விளையாது.

உடனடியாக, கார்வர் தனது விவசாய நண்பர்களை அழைத்தார், 'நீங்கள் பருத்தியை மட்டும் தொடர்ந்து பயிரிட்டுக் கொண்டிருந்தீர்கள். அதனால்தான் இந்தப் பரிதாபமான நிலைமை உங்களுக்கு ஏற்பட்டுவிட்டது' என்று அறிவித்தார்.

விவசாயிகள் அவரை நம்ப முடியாமல் பார்த்தார்கள். பருத்தியைப் பயிரிடுவதில் இப்படி ஓர் ஆபத்து இருக்கிறதா?

'ஆமாம்' என்றார் கார்வர், 'ஆனால், அதைப் பற்றிப் கவலைப்பட வேண்டியதில்லை, நிலத்தின் சத்துக்களை மறுபடியும் பெறுவதற்கு ஒரு வழி கண்டுபிடித்துவிட்டேன்'

'என்ன வழி?'

'பருத்திக்குப் பதிலாக, வேறு சில பயிர்கள் இருக்கின்றன, அதையெல்லாம் மாற்றி மாற்றிப் பயிரிட்டால், சத்துகள் திரும்பக் கிடைத்து விடும்'



விவசாயிகள் உற்சாகமானார்கள். கார்வரின் யோசனைகளை உடனடியாகச் செயல்படுத்த ஆரம்பித்தார்கள்.

அடுத்த பல மாதங்கள், அந்த நிலங்களில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்டது. அதன்பிறகு, நிலக்கடலை; பின்னர் மீண்டும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு; மீண்டும் நிலக்கடலை...

இப்படியே சுழற்சி முறையில் மாற்றி மாற்றிப் பயிர் செய்ததில், இழந்த சத்துகள் நிலத்துக்கு திரும்பக் கிடைத்தன. கொஞ்சம் கொஞ்சமாக அந்த வயல் வெளிகள் மறுபடிப் பொன் விளையும் பூமியாக மாறிவிட்டன.

ஆனால், ஒரு கிராமம் முழுக்க எல்லோரும் சர்க்கரை

வள்ளிக் கிழங்கு, நிலக்கடலை பயிர் செய்தால் என்ன ஆகும்? மூட்டை மூட்டையாகக் கிழங்குகள், கடலைகள் குவிந்துவிட்டன. அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

கொஞ்சம் கிழங்குகளை மக்கள் சமைத்துச் சாப்பிட்டார்கள், நிலக்கடலையில் சுண்டல் செய்தார்கள், மற்ற உணவுப் பண்டங்களிலும் கடலையை நிறையச் சேர்த்துக் கொண்டார்கள். என்றாலும், இன்னும் ஏகப்பட்ட கிழங்கு, கடலை மிச்சமிருந்தது.

விவசாயிகள் கார்வரிடம் ஓடினார்கள், 'இந்த மூட்டைகளையெல்லாம் ஏதாவது செய்தாகவேண்டும், இல்லையென்றால் மொத்தமும் அழுகிப்போய் வீணாகிவிடும்'

கார்வர் யோசித்தார், இவ்வளவு சர்க்கரை வள்ளிக் கிழங்கு, நிலக்கடலையை வைத்துக்கொண்டு வேறு என்ன செய்யலாம்?

மறுபடியும், அவர் தனது ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கிழங்குகள், கடலையை வைத்து விதவிதமான பொருள்களை உருவாக்கிப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தார்.

தன் ஆராய்ச்சியில் கண்டுபிடித்த விஷயங்களை, விவசாயிகளுக்காக எழுதி வெளியிட்டார் கார்வர். கிழங்கு, கடலையை வைத்து நூற்றுக்கணக்கான உணவுப் பண்டங்களை விதவிதமாகச் சமைப்பது எப்படி என்று இந்தக் குறிப்புகளில் விளக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமா? சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து மிட்டாய் செய்வது, சாயம் தயாரிப்பது, பசை காய்ச்சுவது, நிலக்கடலையிலிருந்து அழகுப் பொருள்களைத் தயாரிப்பது, பெயின்ட் செய்வது, வண்டி ஓட்டுவதற்கான எரிபொருளைக் காய்ச்சுவது, பல நோய்களுக்கான மருந்துகளை உருவாக்குவது... என்று ஏகப்பட்ட புது விஷயங்களை ஆராய்ச்சி செய்து வெளியிட்டார் கார்வர்.

இப்படி நூற்றுக்கணக்கான தயாரிப்புகள். அத்தனையும் விவசாயிகளின் நலனுக்காகக் கார்வர் பாடுபட்டு உருவாக்கியவை.

கார்வரின் ஆராய்ச்சியைப் பார்த்து அனைவரும் வாய் பிளந்தார்கள். உலக விவசாயத்தின் முகத்தையே அவருடைய கண்டுபிடிப்புகள் மாற்றிவிட்டன, விவசாயம் என்பது வெறும் சாப்பாட்டு சமாச்சாரம் அல்ல; அதனைத் தொழில் துறையுடன் இணைத்து நல்ல பலன் பெற முடியும் என்று ஆதாரத்துடன் நிரூபித்துவிட்டார் கார்வர்.

அதுதான், அறிவியலின் மகத்துவம். நாளைய உலகத்தை நிஜமாக்கப் போவதும் இதே அறிவியல்தான் - கார்வர் போல முன்னோக்கிச் சிந்திக்கும் அறிவியல் ஆர்வலர்கள் தான்!

✱ ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர்



போட்டி

ஒளிந்திருக்கும் உண்மைகள்!

'ஆப்பிள் ஏன் கீழே விழுகிறது?' என்கிற கேள்வி தான், நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடிக்க அடிப்படையானது. அது போலவே, நடைமுறை வாழ்வில் நாம் காணும் சின்னச் சின்ன விஷயங்களில் ஒளிந்துள்ள அறிவியல் உண்மைகளை அலசும் பகுதி இது. ஒரு சின்ன உதாரணம்.

ஆறுவதும் அறிவியல்!



வெட்ட வெளியில் உலர்த்தும்போது விரைவாகக் காயும் துவைத்த துணிகள் மூடிய அறையினுள் காய அதிக நேரம் ஆகிறது. என்ன காரணம்?

பொதுவாகவே, காற்றில் ஈரப்பதம் உண்டு. அதாவது காற்றில் நீர் மூலக் கூறுகள் உண்டு. ஈரத்துணியை உலர்த்தும்போது இரண்டு செயல்கள் நிகழ்கின்றன. ஒரு வினாடியில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான (n1) நீர் மூலக் கூறுகள் காற்றிலிருந்து துணியின் மீது படிகின்றன. இவ்வாறே துணியிலிருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் (n2) காற்றுக்கு இடம் பெயர்கின்றன.

வெட்ட வெளியில், காற்றிலிருந்து துணியில் படியும் நீர் மூலக்கூறுகளை விட (n1), அதிக எண்ணிக்கையில் (n2) ஈரத்துணியிலிருந்து நீர் மூலக் கூறுகள் காற்றுக்கு இடம் பெயர்கின்றன. (அதாவது n2>n1).

மூடிய அறையினுள், வெளிக்காற்று வர வாய்ப்பு குறைவு. இதனால் துணியிலிருந்து காற்றுக்கு இடம் பயரும் நீர் மூலக்கூறுகள் (n2), அதிக எண்ணிக்கையில் (n1) மீண்டும் துணியின் மீது படிகின்றன (அதாவது n2<n1). எனவே தான் துணிகள் காய அதிக நேரம் தேவைப்படுகிறது.



ரொம்ப தெரிஞ்சுக்கிட்டு, டயர்டா இருக்கா? ஒரு காஃபி குடிச்சுக்கிட்டே அடுத்த மாதத்துக்கான கேள்வியைப் படிங்க.

தம்ளரைவிட, டபராவில் ஊற்றப்பட்டிருக்கும் சூடான காஃபி அல்லது டீ சீக்கிரம் ஆறிவிடுகிறது. இது ஏன்?

யோசிச்சு சரியான விடையை **'ஒளிந்திருக்கும் உண்மைகள்' பகுதி,** என்று தலைப்பிட்டு, எழுதி அனுப்புங்க. சரியான பதிலுக்கு பரிசு உண்டு.

✱ ஆசிரியரின் தீர்ப்பே இறுதி!

முடிவு தேதி: **20.7.2009**

● ஐபிஎல் 2 போட்டி இந்த வருடம் தென் ஆப்பிரிக்காவில் நடந்தது. இறுதிப் போட்டியில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸும் டெக்கான் சார்ஜர்ஸும் மோதின. இதில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி வென்று கோப்பையைக் கைப் பற்றியது. கில்கிறிஸ்ட் தொடர் நாயக னாகவும் அனில் கும்ப்ளே இறுதிப் போட்டி நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அடுத்த வருட ஐபிஎல் போட்டி மீண்டும் இந்தியாவில் நடக் கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

● ''நான் ஒருபோதும் இந்திய 20-20 அணியில் கலந்துகொள்ள மாட்டேன்'' என்று சச்சின் அறிவித்துள் ளார். ''தோனி வசமுள்ள இப்போதைய இளைஞர் அணியே மிகச் சிறந்த அணியாக இருக்கிறது. நான் அதற்குத் தேவையில்லை. ஆனால் தொடர்ந்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி சார்பாக கலந்து கொள்வேன்' என்றும் அறிவித்துள்ளார் சச்சின்.

● இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட ஐசிஎல் அமைப்பில் கலந்துகொண்ட வீரர்களுக் குத் சில காலங்களாக தடை விதிக்கப் பட்டிருந்தது. இப்போது 'ஐசிஎல்-லி ருந்து வெளியேறும் வீரர் ஒரு வரு டத்துக்குப் பிறகு மீண்டும் இந்தியா சார் பாக ஆட அனுமதிக்கப்படுவர்' என்று பிசிசிஐ அறிவித்துள்ளது. இதனால் நிறைய வீரர்கள் ஐசிஎல்-லுடனான தொடர்பைத் துண்டித்துள்ளனர். இவர் கள் இனி மாநில அணியில் விளை யாடி தங்கள் திறமையை நிரூபித்து இந்திய அணிக்குள் நுழையலாம். என் றாலும், இந்திய கிரிக்கெட் வாரியம் கபி லுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். இல்லையெனில், ஐ.பி.எல்லோ, அத னால் கிடைத்த பெருத்த வருமானமோ, வாரியத்துக்குக் கிடைத்திருக்குமா?



விளையாட்டு!

● T 20 உலகக் கோப்பை இங்கிலாந்தில் ஆரம்பித்துவிட்டது. ஆரம்பத்திலேயே இங்கிலாந்தை வென்று, ஆச்சர்ய அதிர்ச்சி கொடுத்திருக்கிறது, ஹாலந்து அணி. ஆஸி.யும் வங்கதேசமும் சூப்பர் 8 சுற்றை எட்டாமலே வெளியேறிவிட்டன. இந்த மாதிரி சுவாரஸ்யங்கள் அடுத்தடுத்து காத்திருக்கின்றன என்றுதான் தோன்றுகிறது.

● ஃப்ரெஞ்ச் ஓப்பன் போட்டியின் மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது நடாலின் தோல்வி. இதுவரை ஃப்ரெஞ்ச் ஓப்பன் போட்டியில் தோல்வியே அடையாத நடால், ஸ்வீடன் வீரர் சொடர்லிங்கிடம் நான்காவது சுற்றில் தோற்றுப்போனார். 'இந்தத் தோல்வியால் நான் கலங்கப்போவதில்லை. மக்கள் ஒருபோதும் உங்கள் தோல்வியை ஞாபகம் வைத்துக்கொள்ளப் போவதில்லை. வெற்றிகள்தான் வரலாறு ஆகின்றன'' என்று தம் தோல்வி குறித்துக் கூறினார் நடால்.

● 22 வயது சானியா மிர்சாவுக்குத் திருமணம் நடக்கவிருக்கிறது. 24 வயது மொகம்மத் சொராப் மிர்சாவுடனான திருமண நிச்சயதார்த்தம் ஜூலை 10-ம் தேதி நடக்கவிருக்கிறது. 'திருமணத்துக்குப் பிறகு டென்னிஸில் ஈடுபடமாட்டேன்' என்று முன்பு சானியா தெரிவித்திருந்தார். ஆனால், இப்போது 'திருமணத்துக்குப் பிறகும் நிச்சயம் டென்னிஸில் தொடர்ந்து ஈடுபடுவேன்'' என்று கூறியிருக்கிறார். ○



ஒரு கோழிக்குப் பல குஞ்சுகள். அவற்றில் ஒரு குஞ்சுக்கு மட்டும் ஒரு கண், பாதி மூக்கு, பாதி (ஒரு) இறக்கை, ஒரு கால், பாதி தலை இப் படி எல்லாம் பாதி பாதியாக இருந்தன. இதை நண்பனான ஒரு பன்றி சொல்லித்தான் தாய்க்கோழியே கவனித்தது. 'மெடியோபொலிடோ' என்று அதற்குப் பெயர் வைத்தது தாய்க்கோழி. இதற்கு 'ஸ்பானிஷ்' மொழியில் 'பாதி கோழி' என்று அர்த்தம்.

பார்வைக்குத்தான் மெடியோ இப் படி அரைகுறை. ஆனால், ஒரே குறும்பு. பயம் என்பதே கிடையாது. அவைகள் வசிக்கும் பண்ணைக்கு வெளியே அம்மா யாரையும் கூட்டிப் போனதே இல்லை. ஆனால், எப்படியாவது மன் னனிடம் போய் ஏதாவது பரிசு பெற்று விட வேண்டும் என்று மெடியோ துடியாய்த் துடித்தது.

ஒருநாள் யாருக்கும் தெரியாமல் மன்னன் வசிக்கும் மாட்ரிட் நகருக்குக் கிளம்பிவிட்டது மெடியோபொலிடோ. தத்தித் தத்தி நடந்து ஒரு ஓடைக்கு அருகே வந்தபோது, ஓடை நீர்



மெடியோ பொலிடோ!

சொன்னது: "பாப்பா பாப்பா, இங்கு ஒரேயடியாகக் களைகள் முளைத்துக் கிடக்கின்றன. உனது காலால் அவற்றைக் களைந்து நான் சுலபமாக ஓடுவதற்கு வழி செய்து கொடேன்."

மெடியோவுக்கு அவசரம். "போ... பா... நானே ஒற்றைக்காலால் தவித்துக் கொண்டு மன்னரிடம் பரிசு கேட்கலாமா என்று அலைகிறேன். நீ வேற..." என்று நகர்ந்தது.

வழியில் கொஞ்சமாக எரிந்து கொண்டிருந்த நெருப்பு, "தம்பி... நாலு விறகை என் பக்கம் தள்ளி விட்டுப் போயேன். அணைந்து விடுவேன் போலிருக்கிறது" என்றது. அதற்கும் ஓடைக்குச் சொன்ன அதே பதிலைக் கூறிவிட்டு நகர்ந்தது மெடியோ. சற்று தூரம் சென்றதும் காற்று, "இதோ பார் பையா, இந்த மரக்களைகளுடன் முட்டி மோதி வெளியே வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றை ஒடித்துவிட்டுப் போயேன்." மெடியோவிடமிருந்து இதற்கும் அதே பதில் தான்.

முடிவில் மாட்ரிட் நகரத்தில் அரசரின் அரண்மனையும் வந்தது. ஒரே குஷி மெடியோவுக்கு. ஆனால், வழியிலேயே அதை மடக்கிப் பிடித்தாள் அரண்மனை சமையற்காரி. "அடடே... சூப் செய்யலாம் போலிருக்கிறதே' என்றவள், முதல் வேலையாக அதைத் தண்ணீர்ப் பாத்திரத்தில் போட்டாள்.

மெடியோ அரண்டு போனது. தண்ணீரிடம் கெஞ்சியது.

"அண்ணே, என்னை வெளியில் தள்ளிவிடேன். பிழைத்துப் போகிறேன்."

"ஓடை நீருக்கு உதவினாயா நீ? எப்படி உனக்கு உதவுவது?" எனக் கூறிவிட்டது தண்ணீர்.

இதற்குள் சமையற்காரி தண்ணீர்ப் பாத்திரத்தைத் தூக்கி அடுப்பில் வைத்




எஸ்.ஜெயலெட்சுமி

தான். மெடியோ நெருப்பிடம் முறையிட்டது.

''அண்ணே, அணைந்துவிடேன். நான் எப்படியாவது நீந்தி வெளியே குதித்து ஓடி விடுகிறேன்.''

''நாலு விறகை என் பக்கம் தள்ளி விட்டுப் போ என்று கேட்டேன். அப்போது நீ உதவினாயா? இப்போது எப்படி என்னிடம் உதவி கேட்கிறாய்?' எனக் கூறி மறுத்தது நெருப்பு.

இதற்குள் அங்கு வந்த வேறு ஒரு சமையற்காரி அரைகுறை உருவத்துடன் தண்ணீர் பாத்திரத்தில் கிடந்த மெடியோவைப் பார்த்தாள்.



'உன்னை தெய்வமாக்கி விடுகிறேன்' என்று கூறிய இறைவன் அதை சிலையாக்கினார். இன்றும் தேவாலய கோபுரங்களின் உச்சியில் நிற்கிறது மெடியோபொலிடோ - வெதர்காக் என்ற பெயரில்!

''ஏண்டி ஜோஸ்ஃபினா, இந்த நோஞ்சான் கோழிக்குஞ்சை வைத்துக் கொண்டு என்ன சூப் செய்ய முடியும்? அரை வாய்க்குக்கூட காணாது'' என்று தோழியிடம் சொல்லியபடியே, மெடியோவை நீரிலிருந்து எடுத்து வெளியே வீசினாள்.

'தப்பித்தோம்... பிழைத்தோம்' என்று உடம்பிலிருந்த தண்ணீரை உதறிவிட்டு ஓடியது கோழிக்குஞ்சு.

காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. மெடியோ காற்றைப் பார்த்து,

''காற்றே, காற்றே... நான் பட்ட பாடு போதும். என் வீட்டுப் பக்கமாக என்னைக் கொஞ்சம் விசிறி விடேன். அப்படியே, வீடு போய்ச் சேருகிறேன். மன்னனும் வேண்டாம், பரிசும் வேண்டாம்'' எனக் கெஞ்சாத குறையாகக் கேட்டது.

''மரக்கிளைகளிலிருந்து என்னை விடுவிக்க, நான் உன்னிடம் எப்படி கெஞ்சினேன். நீ உதவினாயா? நீ வீட்டுக்கா போக வேண்டும்? இதோ பார் உன்னை என்ன செய்கிறேன் என்று'' எனக் கோபாவேசத்துடன் சொல்லியபடி, மெடியோபொலிடோவைத் தூக்கி ஆகாயத்தில் பலம் கொண்ட மட்டும் 'வீசியது காற்று.

காற்றின் வீச்சில் அலறியபடியே பறந்த மெடியோ, அங்கிருந்த தேவாலய கோபுர உச்சியில் சென்று மாட்டிக்கொண்டது. எல்லாவற்றையும் கண்ணுற்ற இறைவன் 'பாவம் உன்னைத் தெய்வமாக்கி விடுகிறேன்' எனக் கூறி அங்கேயே அதை சிலையாக்கி விட்டார்.

இன்றும் தேவாலய கோபுரங்களின் உச்சியில் சிலையாக நிற்கிறது மெடியோபொலிடோ - வெதர்காக் (weather Cock) என்ற பெயரில், காற்றில் கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்று இன்றும் ஆடிக் கொண்டிருக்கிறது.

அடுத்தமுறை தேவாலய உச்சியைக் கூர்ந்து நோக்குங்கள். அங்கு வெதர்காக் ஆடிக் கொண்டிருக்கும் - இல்லையில்லை; நமது அரைகுறை 'மெடியோபொலிடோ' ○



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

அல்பட்ராஸ்

'அல்பட்ராஸ்' என்பது ஒரு கடல் பறவை. உலகில் வாழும் பறவைகளிலேயே இதன் இறக்கைதான் மிகப் பெரியது. இதன் இறக்கை குறைந்த பட்சம் பத்தே முக்கால் அடி நீளமுள்ளதாக இருக்கும்.

- ஆ. மகாலட்சுமி,
உறுப்பினர் எண்: 269,
நான்காம் வகுப்பு,
ஊ.ஒ.துவக்கப்பள்ளி,
காயக்காடு

கடல் முயல்!

'கடல் முயல்' என்று ஓர் உயிரினம் உள்ளது. இது மெல்லுடலிகளில் வயிற்றுக் காலி வகுப்பைச் சேர்ந்தது. அகன்று பரந்த இதன் உணர்க் கைகள் முயலின் காதுகள் போல தோற்றமளிப்பதால் இது இப் பெயர் பெற்றது. மெல்லுடலிகளிலேயே அதிக முட்டைகளிடும் இனம் இது தான். நான்கு மாத கால அளவில் ஐந்து கோடி முட்டைகள் வரை இடும் என்கிறார்கள். சுமார் பத்து செ.மீ நீளம் வரை வளரும். இது கடற்பாசிகளைத் தின்று வாழ்கிறது.

- பா.விக்னேசுவரன், குட்டம்

மோனார்ச்

மோனார்ச் என்னும் வண்ணத்துப்பூச்சி மிகவும் அழகாக இருக்கும். வடஅமெரிக்கா. நியூசிலாந்து மற்றும் தென்ஆஸ்திரேலியாவில் அந்த அழகிய வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன. அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருப்பதும் இயற்கைதானே. இந்த அழகிய வண்ணத்துப் பூச்சிகள் மிகவும் விஷத்தன்மை உடையவை.

முட்டையிடும்

இவை மிகப் பெரிதாக இருக்கும். அதேசமயம் மிக மெதுவாகப் பறக்கும். இது கம்பளிப் பூச்சி பருவத்திலேயே விஷத் தன்மை உடையதாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் 'மில்க் வீட்' எனப்படும் தாவரங்கள் தான். இந்தத் தாவரங்கள் மிகவும் விஷத்தன்மை வாய்ந்தவை. இவற்றைச் சாப்பிட்ட பல உயிரி



ஙங்கள் இறந்து விடுகின்றன, இந்த மோனார்ச் வண்ணத்துப் பூச்சியைத் தவிர. இவை அத் தாவரத்தின் இலைகளைச் சாப்பிட் டும் அதன் விஷம் இந்த வண்ணத் துப்பூச்சிகளை மட்டும் தாக்காது.



விஷச் சிலந்தி

எல்லோரும் 'பிளோக்விட்டா' என்னும் சிலந்தி அதிக விஷத் தன்மை கொண் டது என்று நினைக்கிறார்கள்.



முயல்!

ஆனால், 'வாண்டரிங் ஸ்பைடர்' என்ற சிலந்தி தான் மிகவும் கொடியது. 250 எலிகளை ஒரே நேரத்தில் கொன்றுவிடும் அளவுக்கு இதனிடம் விஷம் இருக்கிறது. முழு வளர்ச்சியடையும் 'வாண்டரிங்' சிலந்தி அதிக பட்சம் அரை அடி நீளம் வளர்கிறது பெரிய பூச்சிகள் மற்றும் பல்லிகளை இவை பிடித்துத் தின்று விடுகின்றன.



மிகப் பெரிய எலி

உலகிலேயே மிகப் பெரிய எலி, 'ஆப்பிரிக்கன் காம்பியன் பவுசி' என்பதாகும். இது ஒன்றரை அடி நீளம்வரை வளரும். இந்த எலியின் எடை மூன்று கிலோ வரை இருக்கும். செனகல், சூடான் ஆகிய நாடு களின் காடுகளில் இந்தவகை எலிகள் காணப்படுகின்றன. - **ம.விவேக், குட்டம்**



வானம் எட்டும்!



ஹேமாம்பாள், கோவை

தொட்டால் வாடும் தொட்டாற்சிணுங்கி - கை
பட்டால் ஆடும் நாட்டிய பொம்மை!
விட்டால் ஓடும் பூனையின் குட்டி - கை
பட்டால் பாடும் வானொலிப் பெட்டி

நட்டால் முளைக்கும் தாவரங்கள் - நீர்
விட்டால் வளரும் மாமரங்கள்!
சுட்டால் வளையும் தேனிரும்பு - சீர்
கெட்டால் விளையும் பெருங்கேடு.

அட்டால் உணவின் சுவைகூடும் - உரம்
இட்டால் பயிரின் நலம்கூடும்
மெட்டால் பாடல் உருவாகும் - பாடு
பட்டால் வாழ்வு நலமாகும்.

வெட்டால் எதுவும் முறிந்துவிடும் - விலை
இட்டால் அன்பும் உடைந்துவிடும்.
கெட்டால் நேயம் மறைந்துவிடும் - பண்
பட்டால் மனிதம் வளர்ந்துவிடும்.

ஒட்டாய் எவரும் இருந்திட்டால் - இங்கு
எட்டா உயர்வு எதுவுமில்லை
மொட்டாய் அரும்பும் சிறுவர்தம் - அன்புக்
கெட்டா வானம் ஏதுண்டு?

ஒளி வீசும் இல்லம்!

கே.பி.பத்மநாபன்,
சிங்காநல்லூர்




உணவைப் பகிர்ந்து அளித்திடுவீர்;
உலகில் பசிநோய் தீர்ந்துவிடும்
பணத்தைப் பகிர்ந்து கொடுத்திடுவீர்;
பாரில் ஏழ்மை பறந்தோடும்;
குணத்தைப் பகிர்ந்து கொண்டோர்க்கு
குறைகள் எல்லாம் நீங்கிவிடும்.
இணக்கம் என்பது இதயத்தை
இயல்பாய் பகிர்ந்து கொள்வதுதான்

அன்பைப் பகிர்ந்தால் மனிதநலம்;
அறிவைப் பகிர்ந்தால் ஞானஒளி;
துன்பம் தன்னைப் பகிர்ந்திட்டால்
தோளில் சுமையும் குறைந்துவிடும்
இன்ப வாழ்வைப் பகிர்ந்திடுவீர்;
இல்லம் என்றும் ஒளிவீசும்;
மன்னிய அன்பை பகிர்வதனால்
மனிதம் பாரில் மேலோங்கும்

சுத்தம் தன்னைப் பகிர்ந்திட்டால்
சூழும் நோய்கள் வாராது;
சித்தம் நிறைந்த பாசத்தை
காக்கும் தாயே முதல்தெய்வம்;
தத்தம் உணர்வைப் பகிர்ந்திட்டால்
தரணி அமைதிப் பூங்காதான்;
சத்தியம் தன்னை பகிர்ந்தாலே
சமுதாயத்தில் சமநீதி!

வசந்தரா

கதை, படம்: தாமரை




கதவைத் திறங்கள். நான் போக வேண்டும்...
முடியாது. இனி காலையில்தான் திறக்க முடியும்...
ஆ... என் குழந்தை அழுவான்... வயதான மாமியார் துன்புறுவாள்...
பெண்ணே... எங்களுக்கு அனுமதியில்லை. புரிந்துகொள்...
இனி இவர்களிடம் பேசிப் பயனில்லை.
இருட்டட்டும். பாறை முடிச்சுகளை பற்றி ஏறிவிடலாம்.


இருட்டியது. பானையை ஒரு புதரில் மறைத்தாள்.
நினைத்தபடியே பாறைகளின் முடிச்சுகளைப் பற்றி....
கோட்டைச் சுவரில் ஏறினாள்.
ம்...முண்டும் முடிச்சுமான பாறைகள்... இறங்கிவிடலாம்.
பாறைகளின் இடைவெளியைப் பற்றியபடி கவனமாகப் பார்த்து மெல்ல இறங்கினாள்...
மெதுவாகத்தான் இறங்கினாள். எனினும் கால் வைத்த பாறை சரிய...
ஆ... அம்மா...
(தொடரும்)



இந்த டைஜஸ்டில்...

உள்ளே...

ரோஸம்மாவின்

ரோஸம்மா பெரும் பணக்காரி. உறவுகள் யாருமில்லாத அவள், அந்த ஊரில் இருந்த அனைவருக்கும் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்து வந்தாள். அதனால், எல்லாரும் அவளை நேசித்தனர். இந்த நிலையில் ஒரு நாள் அவளுக்குப் பார்வை போய் விட்டது.

பார்வை இழந்த அவளுக்கு மருத்துவம் செய்ய ஒரு மருத்துவர் வந்தார். அந்த வீட்டில் இருந்த விலையுயர்ந்த பொருட்களைப் பார்த்தார். விலை உயர்ந்த மரச்சாமான்கள், நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள் உள்பட அனைத்துமே மிக அழகாக இருந்ததால், அந்த மருத்துவரின் ஆசை மிகுதியானது.

''சரி, உங்களுக்கு மீண்டும் பார்வையை ஏற்படுத்தினால், என்ன தருவீர்கள்?'' என்று கேட்டார் அந்த மருத்துவர்.

உடனே ரோஸம்மா சொன்னாள்:

''என்னிடம் உள்ள விலை உயர்ந்த முத்து மாலையைப் பரிசாகத் தருவேன்; தவிர உங்களுக்குரிய கட்டணத்தையும் தருவேன்.''

டாக்டர் சந்தோஷமானார்: ரோஸாம்மாவுக்குச் சிகிச்சையை ஆரம்பித்தார் என்றாலும், தினமும் ஒரு பொருளை எடுத்துச் சென்றார். விலையுயர்ந்த பொருட்கள், வெள்ளிப் பாத்திரங்கள் என்று தினமும் ஒன்றை எடுத்துச் சென்றார் அவர். ஓசை எழுப்பாமல் அவர் செய்த எதுவுமே ரோஸம்மாவுக்குத் தெரியவில்லை.

அதேசமயம், டாக்டரின் சிகிச்சை நேர்மையாக இருந்தது.



சாமர்த்தியம்!

ரோஸாம்மாவுக்கும் பார்வை திரும்பியது. அப்போதுதான் வீட்டில் இருந்த விலையுயர்ந்த பொருட்கள் எல்லாம் காணவில்லை என்பது புரிந்தது. அப்போது வந்த டாக்டர் கேட்டார்:

''உங்களுக்குப் பார்வை திரும்பி விட்டதல்லவா? எனக்கு முத்துமாலையையும் கட்டணத்தையும் கொடுங்கள்.''

ரோஸம்மா தர மறுத்தாள். எனவே, நீதிமன்றத்துக்கு அவளை அழைத்துச் சென்றார் மருத்துவர்.

நீதிபதி கேட்டார்:


''ஏம்மா, உனக்கு பார்வையை மீட்டுக் கொடுத்த மருத்துவருக்குரிய கட்டணத்தைத் தராமல் ஏமாற்றலாமா?''

அதற்கு ரோஸம்மா சொன்னாள்:

''நீதிபதி அவர்களே... பார்வை போகும்முன் என் வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் பல இருந்தன. இப்போது அவை எதுவுமே இல்லை. வந்து போனது இவர் மட்டும்தான். அந்தப் பொருட்கள் இல்லாததால், பார்வையே வரவில்லை என்கிறேன்.''

ரோஸம்மாவின் சொற்களிலிருந்து, மருத்துவர் செய்த தவறைப் புரிந்து கொண்ட நீதிபதி, அவரை விசாரித்தார். அவரும் தன்னுடைய பிழையை ஒப்புக்கொண்டு, பொருட்களைத் திரும்ப அளித்தார்.

ரோஸம்மாவும் தான் சொன்னபடியே முத்து மாலையையும், பணத்தையும் மருத்துவருக்கு வழங்கினாள். ○



வெ. ராஜேஸ்வரி,
உ.எண்:833,
விருதுநகர்.

எத்தனை



I. 1. எட்டடிக்கு ஒரு மரம் வீதம் நடப்பட்டு இருக்கிறது என்றால், 48 அடியில் எவ்வளவு மரங்கள் இருக்கும்?

2. மூன்று எண்கள் உள்ளன. இவற்றின் சராசரி 100. மூன்றாவது எண் இரண்டாவதை விட இருமடங்கு. அந்த எண்கள் யாவை?

3. இரண்டு எண்களின் கூட்டுத் தொகை 45. இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் 21. அந்த இரு எண்கள் யாவை?


- பி. சர்வேஸ்வரன், உறுப்பினர் எண்: 456, மதுரை - 1

II. விடுபட்ட வார்த்தையைக் கண்டுபிடி

GRID (RING) HANG
STIR (?) GAFF.

III. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் 10 கட்டங்களில் 11 முதல் 20 வரை உள்ள எண்களை ஆங்காங்கே நிரப்பி நேர் நேர் வரிசையில் கூட்டினால் (+) விடை 61 வர வேண்டும். கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்?

- கி. பாலாஜி, உ. எண் 657, மயிலாடுதுறை



IV. கீழே தரப்பட்டுள்ள புதிர்களுக்கான விடைகள் 'க' என்ற எழுத்தில் தொடங்குகின்றன.

1. ஆங்கிலப் படத் தயாரிப்புக்கு பெயர் பெற்ற இடம், அமெரிக்காவில் எந்த மாகாணத்தில் உள்ளது?

2. மனித உடலில் உள்ள 'இன்சுலினைச் சுரக்கும் சுரப்பியின் பெயர்?

3. பறவையின் அரசன் என அழைக்கப்படும் பறவையின் பெயர் என்ன?

4. 'புதிய அறிவியல் விவாதம்' என்ற நூலை சிறையில் எழுதியவர்?

5. மது அருந்துவதால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும் உறுப்பு எது?

6. உறிஞ்சிய நீரை அதிக நாள் தக்க வைக்கும் மண் எது?

7. 'இன்னா நாற்பது' என்ற நூலை எழுதியவர்?


8. தேனையும், கரையானையும் விரும்பித் தின்னும் விலங்கின் பெயர் என்ன?

- ர. ஐஸ்வர்யா, நான்காம் வகுப்பு, ஸ்ரீ மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம் - 1

V. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள். எல்லாச் சொற்களும் ME ஆகிய எழுத்துக்களில் ஆரம்பிக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

1. ஆண்கள்
2. உருக்கு /உருகு
3. சாப்பாடு
4. மெல்லிசை/இன்னிசை
5. செய்தி
6. உறுப்பினர்
7. உலோகம்
8. மாமிசம்/இறைச்சி

- சு. துர்காதேவி, உ.எண். 784,
சிவகாசி




மரங்கள்?



VI. இங்குள்ள தீக்குச்சிகளை கூர்ந்து கவனித்தால் 8 முக்கோணம் இருப்பதைக் காணலாம். இதில் 2 தீக்குச்சிகளை மாற்றி அமைப்பதன் மூலம் முக்கோணத்தின் எண்ணிக்கையை 6 ஆக உங்களால் குறைக்க முடியுமா?

- கு. சிவசங்கர், ஏழாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
விளாத்திகுளம்



விடைகள் 56ம் பக்கம்



* உச்சிப் பிள்ளையார் கோயில்

* ராஜகோபுரம், ஸ்ரீரங்கம்

கலைக்

வரலாறு, இலக்கியம், சிற்பம்... என்று எல்லாத் துறையிலும் தனிச்சிறப்பு பெற்று விளங்கும் எங்கள் ஊர் திருச்சி! மிகப் பழங் காலத்தில் இருந்தே சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய உறையூர் எனப்படும் கோழி நகர், இன்றைய திருச்சியில் உள்ள ஒரு பகுதி!

உறையூரை தலைநகராகக் கொண்ட காரணத்தாலேயே சோழ மன்னர்கள் 'கோழியர் கோன்' என்றும் குறிப்பிடப்பட்டார்கள்.


'கங்கையின் புனிதமாய காவிரி' என்று கொண்டாடப்படும் காவிரிக் கரையில் அமைந்துள்ளது எங்கள் ஊர்.

ஆன்மிகம் என்று சொன்னால், உச்சிப் பிள்ளையார் கோயில், தாயுமானவர் கோயில், வெக்காளி அம்மன் கோயில் என்று புகழ் பெற்ற கோயில்கள் உள்ளன. அருகில் உள்ள தீவுப் பகுதியான திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ளார் ரங்கநாதர்.

இங்குள்ள தெற்கு ராஜகோபுரம் ஆசியாவிலேயே மிக உயரமானதாகும். ராமானுஜர், ஆதிசங்கரர், சைதன்ய மஹாபிரபு, ராமதாசர்... உள்ளிட்ட ஏராளமான மகான்கள் இந்த ரங்கநாதரை தரிசித்திருக்கிறார்கள். மகாகாவியமான கம்பராமாயணம் இந்தத் திருவரங்கத்தில்தான் அரங்கேறியுள்ளது.

அருகில் உள்ள திருவானைக் காவலில் உள்ள ஜம்புவேஸ்வரர் கோயில், தமிழ்நாட்டிலுள்ள மாடக் கோயில்களில் முதலாவதாக கட்டப் பட்டது ஆகும். கோச்செங்கட் சோழனின் வரலாறோடு இணைந்த அற்புதம் இந்தத் திருக்கோயில்!

கோட்டை!



குறிப்பிட்ட பருவம் என்று இல்லாமல், வருடத்தின் அனைத்து சமயங்களிலும் மாம்பழம் கிடைக்கும் மாம்பழச் சாலை; புகழ்மிக்க உறையூரின் கைத்தறிப் புடைவைகள்; நெல் விளையும் பொன் பூமியான மண்ணச்சநல்லூரின் அரிசி ரகங்கள்... என்று திருச்சியின் சிறப்புக்கு சான்றுகள் பல.

கலை வளர்க்கின்ற கலைக்காவிரி; சிற்பநுட்பங்கள் செறிந்த ஆலயங்கள்; ராணி மங்கம்மாள் தர்பார் அரங்கில் அமைந்துள்ள அருங்காட்சியகம்; சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கல்லணை... என்று திருச்சியில் பார்த்து மகிழ வேண்டிய இடங்கள் பலவுண்டு.


விடுதலைப் போராட்ட வீரர்களான வ.வெ.சு.ஐயர், தீரர் சத்தியமூர்த்தி, திரையுலகின் முடிசூடா மன்னராக விளங்கிய தியாகராஜ பாகவதர், கவிஞர் வாலி, எழுத்தாளர்களான அகிலன், ராஜம் கிருஷ்ணன், இசைவாணர்களான லால்குடி ஜெயராமன், மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை என திருச்சிக்கு பெருமை சேர்த்தவர்கள் பலர்.

முக்கொம்பு, கல்லணை இரண்டும் சிறந்த சுற்றுலாத் தலங்கள். முக்கொம்பில் இருந்துதான் காவிரி, கொள்ளிடம் என இரண்டாகப் பிரிகிறது காவிரி. ரயில் வழி, சாலைவழி, விமான வழி என்று எல்லாவகையான இணைப்புகளையும் பெற்ற மாநகரான திருச்சியை ஒரு முறை வந்து பாருங்கள்; பிறகு அடிக்கடி வருவீர்கள்! ○

அ.க. அப்சானா பர்வீன்,
உ.எண்:487,
திருச்சி.


★ கல்லணை





முல்லா!
ஊரிலிருந்து திரும்பிய முல்லா...
வீட்டில் எதையுமே காணவில்லையே; யார் திருடியது?
ஒருநாள்...
ஆ... இது என்னுடைய கழுதை போல் இருக்கிறதே?
கழுதையைப் பின் தொடர... ஒரு வீட்டின் முன்பு போய் நின்றது...
இது யார் வீடு? என் வீட்டில் நடந்த திருட்டுக்கும் இவனுக்கும் தொடர்பு இருக்குமோ?
சற்று நேரத்தில் வெளியே வந்த வீட்டுக்காரர்...
ம்... என்னுடைய ஹுக்கா, படுக்கை, பாத்திரங்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன.
ஏய்... யார் நீ? எதற்காக இங்கே வந்து படுத்திருக் கிறாய்?
ம்... என் வீட்டில்தான் படுத்திருக்கிறேன்.
உன்னுடைய வீடா? என்ன உளறுகிறாய்?
ஆம். வீடு மாறிவிட்டேன். கேட்காமலே நீ எனக்கு உதவி யிருக்கிறாய்...
புரியவில்லை. நான் எங்கு உதவினேன்.
என் பொருள் அனைத்தையும் கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி.
நான்... அது வந்து...
சரி; வீடு மாற்றியதற்கு உனக்கென்ன கூலி தர வேண்டும் சொல்.
மன்னி யுங்கள். உங்கள் பொருள்களை கொடுத்து விடுகிறேன்.
முல்லா சந்தோஷ மாய்த் திரும் பினார்.



வண்ணம் தீட்டுங்கள்!



இங்குள்ள படத்துக்கு வண்ணம்
தீட்டி மகிழுங்கள்



சுகாதாரம்!

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனும் ஒருமுறை விருந்துண்ணச் சென்றார்கள். ராதா கிருஷ்ணன் கையைச் சுத்தமாகக் கழுவிட்டு சாப்பிட உட்கார்ந்தார். சர்ச்சில் ஸ்பூனை உபயோகித்துச் சாப்பிட ஆரம்பித்தார். ராதா கிருஷ்ணன் கையினால் சாப்பிடுவதைப் பார்த்த சர்ச்சில், ''என்ன இது, ஸ்பூனை யூஸ் பண்ணுங்க. அதுதான் சுகாதாரமானது'' என்றார். உடனே, ''இல்லை சார்! கைதான் ரொம்பச் சுகாதாரமானது' ஏனென்றால், இதை வேறு யாரும் உபயோகப்படுத்த முடியாது'' என்றார் டாக்டர் ராதாகிருஷ்ணன். சர்ச்சில் ஆச்சரியத்தில் அதிர்ந்து போனார்.

- சுப. நேசிகா,
காயக்காடு



'தொடர் நிலைக் கோட்பாடு' என்பதைக் கண்டுபிடித்தவர், விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். ஒருசமயம் அவர் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார்.

அப்போது விருந்து வைத்த பெண்மணி அவரிடம், ''உங்களின் கோட்பாட்டை ஒரு சில சொற்களில் கொஞ்சம் விளக்குங்கள்!'' என்று கேட்டாள்.

''அதற்கு முன்பு உங்களுக்கு ஒரு கதை கூறுகிறேன்'' என்ற ஐன்ஸ்டீன் சொல்ல ஆரம்பித்தார்.

நான் பார்வையற்ற ஒருவருடன் நடந்து

பாலின் நிறம்!

கொண்டிருந்தேன். அப்போது, எதற்காகவோ, 'எனக்குப் பால் மிகவும் பிடிக்கும்' என்று கூறினேன்.

'பாலா, அது என்ன?' என்று கேட்டார் அவர்.

''அது ஒரு வெண்மையான திரவம்' என்றேன் நான்.

'திரவம் தெரியும்; வெண்மை என்றால் என்ன? என்று கேட்டார் அவர்.

''கொக்கினுடைய இறகின் நிறம்'' என்றேன். ''இறகு தெரியும்; கொக்கு என்றால் என்ன?' என்று அவர் கேட்டார்.

''வளைந்த கழுத்துள்ள ஒரு பறவை'' என்றேன் நான்.

''கழுத்து தெரியும்; வளைந்திருப்பது என்பதுதான் எனக்குப் புரியவில்லை'' என்றார் அவர்.

உடனே, நான் அவர் கையைப் பிடித்து வளைத்தேன். 'வளைந்திருப்பது என்றால் இப்படித்தான்'' என்றேன்.

''உடனே அவர், ''பால் எப்படி இருக்கும் என்பது இப்போது எனக்குப் புரிந்துவிட்டது'' என்றார். 'தொடர்நிலை கோட்பாடு' பற்றி நான் கூறுவதும், நீங்கள் புரிந்து கொள்வதும் இப்படித்தான் இருக்கும்'' என்றார் ஐன்ஸ்டீன்.

அவர் சொன்னதன் உட்பொருளை உணர்ந்து அந்தப் பெண்மணியும் ஆமோதித்தாள்.

- க. கார்குழலி,
ஒன்பதாம் வகுப்பு, ஏ.கே.டி. மெட்ரிக் மேனிலைப் பள்ளி,
கள்ளக்குறிச்சி


சம்பவம்!

ஒருமுறை பெர்னாட்ஷா பழைய புத்தகக் கடையொன்றில் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். அங்கே அவரெழுதிய நூலொன்று விற்பனைக்கிருந்தது.

பிரித்துப் பார்த்தார். அது ஒரு நண்பருக்கு பெர்னாட்ஷா பரிசளித்தது. அதில் நண்பரின் பெயரை எழுதி அன்பளிப்பென்று குறிப்பிட்டு கையெழுத்திட்டிருந்தார் பெர்னாட் ஷா. ஆனால், அதை பழைய புத்தகக் கடையில் எடைக்குப் போட்டிருந்தார் நண்பர்.

பெர்னாட்ஷா அந்தப் புத்தகத்தை விலைக்கு வாங்கி மீண்டும் அந்த நண்பரைச் சந்தித்து, ''புதுப்பிக்கப்பட்ட நட்புடன்' என்றெழுதிப் பரிசளித்தார். அதைக் கண்ட நண்பர், அசடு வழிந்தார்!

- சு.அபிஷேக், உ.எண். 518,
சென்னை



புதுப்பித்த அன்பு!




கு. சிவசங்கர்,
ஏழாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
விளாத்திகுளம்






ஆர்.சதீஷ்குமார்,
பதினொராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
சிறுமுகைப்புதூர்

உங்கள்



சி. கதிர்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

பி. சந்திரகலா,
ஒன்பதாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி







தி. காளீஸ்வரன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
மலைப்பட்டி,
விருதுநகர்.



எம்.ஜீவா,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி

கைவண்ணம்!



எம்.இந்திரா,
ஆறாம் வகுப்பு,
செயின்ட் ஆனீஸ் மெட்ரிக்
மே.நி.பள்ளி, கும்பகோணம்



கா.சங்கீர்த்தனா,
உ.எண்.932,
திருப்பத்தூர்





* குதுப்மினார்

புறாவின் உடல் படகு வடிவத்தில் இருக்கும்.

● தமிழகத்தில் கழுதைச் சந்தை நடைபெறும் இடம் கம்பம்.

● மதுரையின் புராண காலப் பெயர் கடம்பவனம்.

● இந்தியாவிலேயே அதிக அளவில் கிரைண்டர்கள் உற்பத்தியாகும் இடம் கோயம்புத்தூர்.

● தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் நாட்டியாஞ்சலி நடைபெறும் இடம் சிதம்பரம்.

- ஆர். மதுமதி, மதுரை - 20

மாமிசம்

◆ பச்சோந்தியின் நாக்குதான் தரையில் வாழ்வனவற்றில் மிகவும் நீளமானது. அதன் உடலின் நீளத்தைவிட நாக்கின் நீளம் அதிகமானது.

◆ தனது வாலை மேலே தூக்கிக்கொண்டு கங்காருவால் தாண்டிக் குதிக்க முடியாது.

- கோடாவிளை த. அருள், திசையன்விளை

✱ ஹிட்லரின் சின்னமான 'ஸ்வஸ்திக்' சின்னத்தை வரைந்து கொடுத்தவர், அவருடைய பல் டாக்டர் பிரடெரிக் ரோன்.

✱ முதன்முதலில் மியான்மரில்தான் கிளி ஜோசியம் தோன்றியது.

* பெருலா



* கோன் ஐஸ் தயாரிக்கும் முறையை உருவாக்கியவர் 'இடாலோ மார்ச்சியானி.'
* பெருங்காயம் என்பது 'பெருலா' செடியின் திரவப் பொருள்.
* முதல் ரோல்ஸ் ராய்ஸ் காரின் பெயர் 'சில்வர் கோஸ்ட்'
* முதன்முதலாக போரில் ராக்கெட்டுகளை பயன்படுத்திய மன்னர் திப்புசுல்தான்.
* எந்த நாட்டுடனும் போரில் ஈடுபடாத ஐரோப்பிய நாடு - சுவிட்சர்லாந்து

- ஆர்.ஆர்.தக்ஷன் குமார்,
உறுப்பினர் எண்: 775, சென்னை - 13

தின்னும் கிளி!

* மிக மெதுவாக பறக்கும் பறவை 'அமெரிக்க உட்காக்.'
* நாம் பிறந்ததிலிருந்து நம் உடலில் வளராத உறுப்பு கண்விழி மட்டும்தான்.
* திருக்குறளில் மொத்தம் 1330 குறள்களும், 14,000 சொற்களும், 42,194 எழுத்துகளும் உள்ளன.
* சீனாவின் முந்தைய பெயர் 'காதே'.
* மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் சிங்கம்.
* மாமிசம் தின்னும் ஆஸ்திரேலிய கிளிகளின் பெயர் 'கியா.' (Kea)
* உலகப்புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தில் 729 படிக்கட்டுகள் உள்ளன.

- த. பிரகல்யா,
பொன்னையா ராமஜெயம்
பொதுப்பள்ளி, தஞ்சாவூர்

* 'இந்தியா 2020' என்ற நூலின் ஆசிரியர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்.
* திருப்பதியிலுள்ள உண்டியலின் பெயர் ஸ்ரீவாரி
* முதலைக்கு 68 பற்கள் உள்ளன.
* நதிகள் இல்லாத நாடு சவூதி அரேபியா.
* சப்போட்டா மரத்தின் பால், சூயிங்கம் தயாரிக்கப் பயன்படுகிறது.
* குதுப்மினாரின் உயரம் 240 அடிகள்.

- பெ.உ.காவ்யபூர்ணா,
உறுப்பினர் எண். 878
ஆத்தூர்.









‘கறுப்பு வெ



விலங்குகள், கூட்டமாக வருவதைக் குறிக்க வெவ்வேறு வார்த்தைகளால் குறிப்பிடுவது வழக்கம். ஆட்டு மந்தை, குரங்குக் கூட்டம்... என்று தமிழில் சொல்வதுபோல,



ளை’காலனி

ஆங்கிலத்திலும் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுவார்கள். அவற்றில் சில வருமாறு:

- யானைக் கூட்டம் - ஹெர்ட் (herd of elephants)
- ஆந்தைக் கூட்டம் - பார்லிமெண்ட் (Parliament)
- காக்கைக் கூட்டம் - மர்டர் (Murder)
- சிறுத்தைக் கூட்டம் - கொலிஷன் (Coalition)
- சிங்கக் கூட்டம் - ப்ரைட் (Pride)
- திமிங்கலக் கூட்டம் - ஸ்கூல் (School)
- மயில் கூட்டம் - மஸ்டர் (Muster)
- பெங்குயின் கூட்டம் - காலனி (Colony)
- வெட்டுக்கிளி கூட்டம் - ஆர்மி (Army)
- கங்காரு கூட்டம் - ட்ரூப் (Troop)
- கிளிக் கூட்டம் - கம்பெனி (Company)
- குதிரை கூட்டம் - டீம் (Team)
- முதலை கூட்டம் - ஃப்ளோட் (Float)




- அதிபன் அன்புமணி, உ.எண். 120, ஈரோடு






ஜெ.அ.ஜெனா,
உ.எண்.985,
தஞ்சாவூர்



எஸ்.ஹரீஷ்,
ஐந்தாம் வகுப்பு,
மான்ட்ஃபோர்ட் பள்ளி,
திருச்சி

சுட்டீஸ் கைவண்ணம்!




ப.கீர்த்தனா,
உ.எண்.123,
சாத்தூர்




ச. அஜய்,
உ.எண்.725,
லக்ஷ்மி கார்டன் பள்ளி,
வேலூர்






டி.எம்.ஜனல்ஸ்,
மூன்றாம் வகுப்பு,
செயின்ட் தாமஸ்
மெட்ரிக் பள்ளி,
தூத்துக்குடி

வித்தியாசங்களைக் கண்டுபிடி!





இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



வெளுத்துப்

படுத்துக்கொண்டு படிக்கும்போது எளிதில் தூக்கம் வந்துவிடும். அதற்கு காரணம் என்ன?


படுத்துக்கொண்டு படிக்கும்போது அசையாமல் ஒரே இடத்திலேயே இருக்கிறோம். இதனால், நம் தசைகளுக்கு செல்லும் ரத்த ஓட்டம் குறைகிறது. அதன் காரணமாக 'லாக்டிக்' அமிலம் சுரக்கிறது. இந்த அமிலம் பிராண வாயுவான ஆக்சிஜனை அதிகம் உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனால் நம் மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தில் இருக்கிற ஆக்சிஜனின் அளவும் குறைந்து, தூக்கம் தானாகவே வருகிறது.



நேந்திரன் வாழைப்பழம் மற்ற வாழைப்பழங்களைவிட வித்தியாசமாகக் காணப்படுகிறது. அதற்கு காரணம் என்ன?

நேந்திரம் வாழைப்பழம் மட்டும் வளைவாக இருக்கும். ஏனெனில் நேந்திர வாழைப்பழத்தை பொறுத்தவரை பூ காயாக மாறி வளரும்போது அதன் இரு பக்கங்களும் ஒரே சீராக வளர்வதில்லை. ஒரு பக்கம் மற்றொரு பக்கத்தைவிட விரைவாக வளர்கிறது. அந்தப் பகுதி மெது வாக வளரும் பகுதியை விட்டு சற்று நீளமாக இருக்கும். பழத்தில் இரு புறங்களுக்கு மிடையே ஏற்படும் இந்த வித்தியாசமே, பழத்தை வளைவாக வளரச் செய்கிறது.

- எஸ். தணிகைவேல்,
உ.எண். 762, காஞ்சிபுரம்



நாம் வெயிலில் அலைந்தால், கறுத்து விடுகிறோம். ஆனால், துணிகளை அதிக நேரம் வெயிலில் காய வைத்தால், வெளுத்துப் போகின்றன. இது ஏன்?

மனிதன் வெயிலில் அலையும் போது, அந்த வெயிலிலிருந்து தோலைப் பாதுகாக்க, 'மெலனின் பிக்மெண்ட்' எனப்படும் நிறமிகள் தோலின் மேல்புறத்தை அடைகின்றன. இதனால் தோல் கறுத்துப் போய் காட்சியளிக்கின்றது.

துணிகளிலும் நிறமிகள் உண்டுதான். ஆனால், வெயிலில் 'ஆக்ஸிடேஷன்' என்ற ரசாயன மாற்றம் காரணமாக இந்த நிறமிகள் அழிந்து விடுகின்றன. அல்லது பலமிழந்து விடுகின்றன. இதன் காரணமாக துணிகள் வெளுத்துப் போய் காட்சி அளிக்கின்றன.

- எச். அஜிரா,
கீழக்கரை

போவது...?



நமக்கு குளிர் காலத்தில் 'வெட வெட'வென உடல் நடுங்குகிறது. ஆனால், வாத்துகளுக்கு 'ஜில்'லென்ற நீரும் குளிராதது ஏன்?

வாத்துகளுக்கு மிகக் குளிரான பருவ நிலையிலும் அவற்றை வெதுவெதுவென வைத்திருக்கும் வகையில் விசேஷமான சிறகு அமைப்பு உண்டு. இவை உடலை கவசம் போல் மூடி, உடல் உஷ்ணம் வெளியேறாவண்ணம் பாதுகாக்கின்றன. இவற்றின் உடலின் மேல் உள்ள சிறகுகளில் ஒரு விசேடமான எண்ணெய்ப் பசை உண்டு. வாத்து சிறகை விரிக்கையில் இந்த எண்ணெயை, உடலின் மேற்சிறகுகளில் பரப்பி, தண்ணீரை ஒட்டாதபடி வழிய விட்டுவிடுகிறது. இதனால், உடல் உஷ்ணம் அப்படியே உள்ளது. ஆகவே, அதற்கு குளிர்வதில்லை.



- சு.அபிஷேக், உ.எண். 518

2. ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக் கை - அது என்ன?

3. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம் - அது என்ன?

- ஆர்.பி. இரமணி,
அண்ணாநகர்



பறக்காத

I 1 வெள்ளையாய் இருப்பான்;
கறுப்பாய் மாறுவான்;
தன்னையும் அறியாமல்
தண்ணீரும் ஆவான்
- அவன் யார்?

2. சூடு பட்டவனுக்குச் செல்வாக்கு அதிகம்- அது என்ன?

3. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல; சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன!

- ஆர். மதுமதி,
மதுரை-20

II 1. கைக்குள்ளே கரணம் போட்டு கிடக்கிறார் கணக்குப்பிள்ளை-
யார் அவர்?



III 1) மழையில் நனையும்; வெயிலில் காயும்; வெளியில் மலரும்; வீட்டில் சுருங்கும் - அது என்ன?

2) என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் - அது என்ன?

- ஆர். அம்பிகா,
மதுரை - 20

IV 1. கழுத்து உண்டு, தலை இல்லை. உடல் உண்டு, உயிர் இல்லை. கையுண்டு. விரல் இல்லை - அது என்ன?

2. வயிறு நிறையச் சாப்பிட்டால் வானத்தில் பறப்பான். அவன் யார்?

- பி.சர்வேஸ்வரன்,
உறுப்பினர் எண்.456
மதுரை - 1


V 1. பாதுகாப்பான பெட்டிக்குள் பலரும் விரும்பும் கடிகாரம்- அது என்ன?

2. மண்ணுக்குள்ளே இருந்தவன்

கூட்டுக்குள்ளே இருப்பான் - அவன் யார்?

- உ. ரியாஷ், கீழக்கரை

VI 1. அணை ஒன்று; வழி மூன்று - அது என்னை?



பூப்பந்து!

2. பறக்காத பூப்பந்து, பகட்டான சிறு பந்து! வாயிலிட்டால் தேன் பந்து- எது என்ன?

- நெ. இராமன்,
சென்னை - 74

VII 1. வெள்ளை உடம்புக்காரிக்கு, பச்சை நிறக் கூந்தல் - அது என்ன?

2. நாளு மூலையில் தள்ளும். ஆனால் தான் மட்டும் ஒரே மூலையில் தூங்கும் - அது என்ன?

- வெ. சுரேஷ்குமார்,
ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
சிவலிங்காபுரம்

VIII 1. நகரும் பறக்கும் காற்றோடு கலக்கும்; ஆனால் உயிரில்லை - அது என்ன?

2. சொல்லாமல் கொள்ளாமல் வந்து பெருங்குரல் எழுப்புவான் - அவன் யார்?

3. கறுப்பாக இருக்கும்வரை

இவனுக்கொரு கம்பீரம் - அவன் யார்?

- த.மௌரியா,
உ.எண். 939,
கோவை - 108

IX 1. பாட்டுப்பாடும், பாய்ந்து கடிக்கும், வளைந்து ஓடும்; தப்பிப் பறக்கும் - அது என்ன?

2. ஆழக்கடலில் மூடிக் கிடப்பான், ஆன வரையில் ஒளியை கொடுப்பான் - அவன் யார்?

3. இறக்கை உண்டு பறக்காது; ஓடுவதோ குதிரை வேகம் - அது என்ன?

4. பூத்தபோது மஞ்சள், காய்ந்தபோது சிவப்பு, பழுத்தபோது கறுப்பு - அது என்ன?

- த. அபிஷேக்,
உ.எண்.518, சென்னை



விடைகள்:

I. 1. மேகம், 2. செங்கல், 3. கண்ணாடி
II. 1. பேனா, 2. குடை, 3 ஆட்டுக்கல்
III. 1. குடை, 2. கண்ணாடி
IV. 1. சட்டை, 2. பலூன்
V. 1. இதயம், 2. வேர்க்கடலை
VI 1. தேங்காய், 2. லட்டு
VII 1.முள்ளங்கி, 2. விளக்குமாறு
VIII 1. புகை, 2. தும்மல், 3. தலைமுடி
IX 1. கொசு. 2. முத்து. 3. நெருப்புக்கோழி. 4. பேரீச்சம் பழம்

ஜப்பான்!

ஜப்பான் என்றவுடன், அங்குள்ள எரிமலைகள், அணுகுண்டு வீசப்பட்டது, அழகான கடற்கரைகள், டோக்கியோ போன்ற நக்ரங்கள், வாகனங்கள்... என்று பல விஷயங்கள் நினைவுக்கு வரும். ஆனால், இந்தியாவைப் போன்றே சேமிப்பிலும், குடும்ப வாழ்க்கை முறையிலும் சிறந்து விளங்கும் நாடு ஜப்பான். அந்த நாட்டின் குறிப்பிடத்தக்க இன்னொரு விஷயம், அங்கு அரிசிக்கு கொடுக்கப்படும் விசேஷமான சிறப்பு.

விளையும் நெல்லையும் ஒரு கடவுளாகக் கருதி வழிபடுகின்றனர் ஜப்பானியர். அந்தக் கடவுளுக்கு ஜப்பானில் உள்ள கிராமங்கள்தோறும் ஆலயங்கள் அமைந்துள்ளன. நரி போன்ற முகத்துடன் காணப்படும் அந்த தெய்வம் வாய்ப்பகுதியில் ஒரு நெற்கதிரை கவ்வியிருப்பதுபோல காட்சி தருகிறது. 'இனாரி' என்பது அந்தத் தெய்வத்தின் பெயர்.

இது மட்டுமல்ல... இங்கே உள்ள வாகனங்களின் பிரபல பிராண்ட் பெயர்களும் நெல், அரிசிக்கு மரியாதை தரும் வகையில் சூட்டப்பட்டுள்ளன. ''ஹோண்டா '' என்ற சொல்லுக்கு 'முதன்மையான நெல் வயல்' என்று பொருள். ' டொயோடோ' என்றால் 'செழுமையான நெல் வயல்' என்று பொருள். டோக்கியோவில் விமான நிலையத்துக்கு 'நொரிடோ' என்று பெயர். 'நொரிடோ' என்பதற்கு 'வளர்ந்து நிற்கும் நெல்வயல்' என்று பொருள்.

பிரபலமான ஜப்பானியப் பெயர்களில் பல அரிசி தொடர்புடையதாக இருக்கும். உதாரணமாக, ஜப்பானின் பிரதமராக இருந்த, 'புகுடா'வின் பெயருக்கு 'செழிப் பான வயல்' என்று அர்த்தம். ○




அரிசிக்கு மரியாதை!

ஸ்ரீநிவாஸ்,
உ.எண்: 135,
சேலம்.

கேள்வி!

கதை: கா.ஸ்வாதித்யா, பத்தாம் வகுப்பு, அமிர்தா மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர். படம்: தர்மா



குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்தது டியூகாங் (Dugang). மலாய் மொழியின் டியுங் (Duyung) என்ற சொல்லிலிருந்து 'டியுகாங்' தோன்றியது. 'டியுங்' என்ற சொல்லுக்கு 'கடல் கன்னி' என்று பொருள்.

சுமார் ஒன்பது அடி நீளம் வரை காணப்படும் டியூகாங், கடல் பசு, கடல் பன்றி, கடல் ஒட்டகம் என்று வெவ்வேறு பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறது. இவை ஆஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் ஷார்க் குடா மற்றும் மோர்டன் குடா ஆகியவற்றின் இடைப்பட்ட பகுதியில் அதிகமாக காணப்படுகின்றன.



பொதுவாக, கடலடியில் உள்ள புல், பூண்டுகளை உணவாகக் கொண்டு வாழ்பவை இவை. என்றாலும், மோர்டன் குடாபகுதியில் உள்ளவை சிறு பூச்சிகள், புழுக்கள் ஆகியவற்றையும் உண்கின்றன.

கடல் நீரில் வாழ்ந்தாலும், இவை குடிப்பதற்கு நன்னீரைத் தேடியே செல்கின்றன. அப்படிக் கிடைக்காத சமயங்களில், இவை மடிந்து விடுகின்றன என்பதும் வியப்பூட்டும் செய்தி!

கடலில் மட்டுமல்லாமல், நன்னீர் நிரம்பி ஓடும் ஜீவநதிகளிலும்

கடலில்



காணப்படும் இந்த டியூகாங், உணவுக்காகவும், எண்ணெய்க்காகவும் வேட்டையாடப்படுகின்றது.

மனிதர்களால் ஏற்படும் ஆபத்து மட்டுமல்ல; சுறாமீன், திமிங்கலம், முதலை போன்ற நீர்வாழ் உயிரினங்களின் வேட்டையாலும், புயல் போன்ற இயற்கைச் சீற்றத்தாலும் இந்த டியுகாங்கின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது.

அதாவது, பிறப்பு விகிதம் குறைவாகவும், அழிவு விகிதம் அதிகமாகவும் உள்ள உயிரினமான டியூகாங், IUCN வெளியிட்டுள்ள அறிக்கையின்படி அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

உணவு, எண்ணெய், தோல் என்று பலவற்றுக்காகவும் மனிதன் நடத்துகின்ற வேட்டை, ஒரு இனத்தையே அழிப்பதாக மாறுவது எந்த விதத்திலும் சரியல்ல; இயற்கையின் சமச்சீர் விகிதத்தை குலைக்க முற்படுவது உலகுக்கும் நன்மை தராது.

ம.விவேக்,
குட்டம்.





''ஏண்டா, கணக்கு பரீட்சையில பத்து மார்க் வாங்கி இருக்க...?''

''போன தடவை 25 மார்க் வாங்கி இருந்தேன். நீங்கதானே பத்து மார்க் வாங்கியிருந்தா பாஸாகி இருக்கலாம்னு சொன்னீங்க!''

- க. கார்த்திக்,
உ.எண். 952,
நம்பியூர்



''டாக்டர் என்னை நம்பி வீட்டுல ஐந்து ஜீவன் இருக்கு.''

''என்னப்பா! என்னை விட்டுட்டியே ஆறு ஜீவன்னு சொல்லு.''

- ஆர்.தங்கராஜ், பெரிச்சிபாளையம்

மூக்கு மேல



''நான் மார்க் குறைவா வாங்கினா எங்கப்பாவுக்கு மூக்குக்கு மேல கோபம் வரும்!''

''அது பரவாயில்லையே, எங்கப்பாவுக்கு என்மேலதான் கோபம் வரும்.''

-எஸ்.பி.ரவிக்குமார்,
நம்பியூர்



''அப்பா வயிறு வலிக்குது.''

''வயத்துல ஒன்னும் இல்லேன்னா அப்படித்தான்டா வலிக்கும்.''

''அப்ப...நேற்று நீ தலை வலிக்குது-ன்னு சொன்ன...''

- சு. துர்காதேவி,
உ.எண். 784,
சிவகாசி

''சீப்புக்கும், வாழைப்பழத் தோலுக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?''

''தெரியலையே?''

''சீப்பு தலை வாரும்; வாழைப் பழத்தோல் காலை வாரும்!

- சி. விஜயாம்பாள்,
சந்தைப்பேட்டை



கோபம்!



''லெட்டர் எழுதிட்டு எதுக்கு பின்னால கோடு போடறே?''

''பின்கோடு போட்டாதான் லெட்டர் சரியாப் போய்ச் சேரும்னு எங்க வாத்தியார் சொன்னாரு!''

''நான் இதுவரைக்கும் எங்கப்பா கிட்ட அடி வாங்கியதே கிடையாது!''

''அப்படியா! ஆச்சரியமா இருக்கே?''

''ஏன்னா, அவர் அமெரிக்காவில் இருக்காரு!''

- பி. கோபி, புதுப்பேட்டை



'என்ன செய்வது?' என்ற யோசனையில் இருந்தது குள்ளநரி. சிங்கராஜாவும், காட்டெருமையும் நண்பர்களாக இருப்பது அதற்குப் பிடிக்கவேயில்லை. 'இதென்ன அநியாயம்? இப்படி இருந்தால், நாமெப்படி காட்டெருமையைச் சாப்பிடுவது' என்று யோசித்தது குள்ளநரி.

அப்போதுதான் அந்த யோசனை வந்தது. 'பலே... இனி காட்டெருமை காலிதான்' என்று துள்ளிக் குதித்த குள்ளநரி, முகத்தைச் சோகமாக வைத்துக்கொண்டு சிங்கராஜனை போய்ப் பார்த்தது.

அதைப் பார்த்த சிங்கம், ''ஏன் சோகமாக காணப்படுகிறாய்? என்ன காரணம்?'' என்று வினவியது.

''எனக்கெந்த சோகமும் இல்லை. உங்களைப் பற்றித்தான் கவலை'' என்றது குள்ளநரி.


''என்ன கவலை?'' என்று கேட்டது சிங்கம். உடனே பேச ஆரம்பித்தது குள்ளநரி:

''உங்களுடைய வலிமை என்ன? ஆற்றல் என்ன? உங்கள் குரலைக் கேட்டவுடன் பயந்து ஓடும் ஒரு காட்டெருமையை நீங்கள் நண்பனாக மதிக்கலாமா? அதனால்தான் இவ்வளவு அவமானம்! அதுதான் என் கவலை.''

நரியின் பேச்சு புரியாமல், என்னவென்று கேட்டது சிங்கம். நரி தொடர்ந்து பேசியது:

கா. சங்கீர்த்தனா,
உ.எண்:932,
திருப்பத்தூர்.

நல்ல





"காட்டெருமையின் பலம் அதிகமாம். அதற்கு பயந்துதான், நீங்கள் அதை நண்பனாக ஏற்றீர்களாம். அது நினைத்தால், தன் கொம்பால் குத்தி உங்களை தூக்கி வீசிவிடுமாம்... கேட்கவே அவமானமாக இருக்கிறது."

நரியின் சொற்கள் சிங்கத்துக்குச் சினமூட்டின. "அப்படியா சொன்னான்? அவனை அழைத்து வா" என்று சீறுவதுபோல நடித்தது.

அதைப் புரிந்துகொள்ளாமல், "இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்று குதூகலித்த குள்ளநரி, காட்டெருமையிடம் ஓடியது. அதைப் பார்த்த காட்டெருமை "என்ன விஷயம்?" என்றது.

நண்பர்கள்!





"என்னதான் நீ நண்பன் என்று நினைத்தாலும், சிங்கம் அப்படி நினைக்கவில்லை. ஏதாவது காரணம் சொல்லி உன்னை அடித்துச் சாப்பிட நினைக்கிறது. உடனே நீ தப்பித்து ஓடு" என்றது குள்ளநரி.

"ம்... அப்படியா" என்ற காட்டெருமை, "எங்கு ஓடுவது" என்று கேட்டது.

"அதற்கென்ன... இந்தக் காட்டில் இல்லாத இடமா? ஓடி ஒளிந்துகொள்" என்றது குள்ளநரி.

"சரி, நீயும் வா" என்றபடியே குள்ளநரியை அழைத்துக்கொண்டு, வழக்கமாக சிங்கத்தைச் சந்திக்கும் இடத்துக்குச் சென்றது காட்டெருமை. அதை எதிர்பார்க்காததால், நடுங்கியது குள்ளநரி.

"உண்மையைச் சொல்!" என்றது காட்டெருமை. சிங்கத்தைப் பார்த்து, "நீ என்னைக் கொல்லப் போவதாக இவன் சொன்னான்" என்றது காட்டெருமை.

"டேய், எங்களுக்குள் பகையை ஏற்படுத்த நீ செய்த சூழ்ச்சிதானே இது!" என்று கர்ஜித்த சிங்கம், குள்ளநரியை ஓங்கி அறைந்தது. அந்த ஒரு அடியில் வெகு தூரத்தில் புதருக்குள் சென்று விழுந்தது குள்ளநரி.

சிங்கமும் காட்டெருமையும் திரும்பி நடக்க ஆரம்பித்தன. ○

I. 1. ஏழு மரங்கள் (ஏனென்றால் ஒரு அடியில் இரண்டு மரங்கள் நடப்பட்டு இருக்கும்.)
2. 30,90, 180
3. 33, 12

II. இடதுபக்க இரண்டாவது எழுத்து R
இடது பக்க மூன்றாவது எழுத்து I
வலது பக்க மூன்றாவது எழுத்து N
வலது பக்க நான்காவது எழுத்து G
அதேபோல விடுபட்ட வார்த்தை
TIFF



சரியான்னு பாருங்க!

ஐந்து வித்தியாசங்கள்:

1. வண்டின் இறகு
2. ரோஜாப்பூ
3. உடை நிறம்
4. தரையில் மலர்
5. கத்தரிக்கோலின் கைப்பிடி

III

			11
			17
			20
15	14	19	13
12			
18			
16			


IV


M	E	N				
M	E	L	T			
M	E	A	L	S		
M	E	L	O	D	Y	
M	E	S	S	A	G	E
M	E	M	B	E	R	
M	E	T	A	L		
M	E	A	T			



V. 1. கலிஃபோர்னியா, 2. கணையம், 3.கழுகு, 4. கலிலியோ, 5. கல்லீரல், 6. கரிசல் மண், 7. கபிலர், 8. கரடி

V1





கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1101. செ.பிரசாந்த் ராஜா, ஏழாம் வகுப்பு, புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு.

1102. வெ.சக்தி கல்யாணி, ஐந்தாம் வகுப்பு, நியூ பிரின்ஸ் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, சென்னை

1103. ந. மணிவண்ணன், எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி.

1104. பா. பிருந்தா, ஒன்பதாம் வகுப்பு, பி.வி. தேவர் அரசினர் உயர்நிலைப் பள்ளி, கருப்பம்புலம்

1105. பா. பிரீத்தி, ஆறாம் வகுப்பு, பி.வி. தேவர் அரசினர் உயர்நிலைப்பள்ளி, கருப்பம்புலம்

1106. ஈ.சுரேஷ், எட்டாம் வகுப்பு, பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்

1107. செ. பிரகாஷ்ராஜ், ஏழாம் வகுப்பு, செயின்ட் மேரீஸ் மே.நி.பள்ளி, மதுரை

1108. இரா.சரவணன், ஆறாம் வகுப்பு, பே.தேவசகாயம் அன்னத்தாயம்மாள் மே.நி.பள்ளி, விருதுநகர்


1109. ஜி. விக்ரம், ஆறாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, வாலாஜா

1110. க. விக்னேஷ், எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உ.நி.பள்ளி, தேனி

1111. டி.என். லக்ஷ்மிநாராயணன், பத்தாம் வகுப்பு, எஸ்.எஸ்.எம்.எல்.எ.எம்.மே.நி.பள்ளி, நாமக்கல்

1112. அ.கோபால்சாமி, எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப்பள்ளி, நம்பியூர்

1113. எஸ். ஆனந்த தீர்த்தா, ஆறாம் வகுப்பு, நியூ பிரின்ஸ் மெட்ரிக் மே.நி.பள்ளி, சென்னை



1114. ச.க.உதயசங்கர், ஆறாம் வகுப்பு எஸ்.எஸ்.கே.வி.மெட்ரிக் மே.நி.பள்ளி, சின்ன காஞ்சிபுரம்

1115. ஜே. ராக்லண்ட் ஜெரமையா பிரேம், முதல் வகுப்பு, செவன்த் டே அட்வென்டிஸ்ட் பள்ளி, பெரியகுளம்

1116. க.ஜெகதீஷ், மூன்றாம் வகுப்பு, பி.வி.எஸ். பாலபவன் நர்ஸரி பள்ளி, பெரிய காஞ்சிபுரம்.

1117. மு.த.குமரேஷ், ஆறாம் வகுப்பு, சு.சா.மேல்நிலைப்பள்ளி, ஆரணி.

1118. செ.ருத்ரமூர்த்தி, ஒன்பதாம் வகுப்பு, மான்ட்ஃபோர்ட் மெட்ரிக் உ.நி.பள்ளி, விழுப்புரம்

1119. பா.அன்பன், ஒன்பதாம் வகுப்பு, புனித பேட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி

1120. ஞா. அசோகமித்ரன், ஒன்பதாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா இந்து வித்யாலயா, சென்னை.

1121. ப. நவநீதகிருஷ்ணன், பத்தாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி,

க. பரமத்தி

1122. இ. விக்னேஸ்வரன், எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உ.நி.பள்ளி, பெரியகுளம்

1123. வி. சுப்புலட்சுமி, ஆறாம் வகுப்பு, எஸ்.ஹெச்.என்.வி.மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

1124. வெ.சுரேஷ்குமார், ஏழாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, சிவலிங்கபுரம்

1125. சு. ரசிகா, ஒன்பதாம் வகுப்பு, புனித தெரசாள் பெண்கள் மே.நி.பள்ளி, திருத்துறைப்பூண்டி



1126. சு. சந்தோஷ்முருகன், ஆறாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மானாம்பதி

1127. நா. சஞ்சீவ்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, மானாம்பதி

1128. எஸ்.எஸ்.அர்ஜுன், யுகேஜி, சாவர்கர் நேதாஜி மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

1129. க.முரளி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை

1130. எம்.விக்னேஷ் குமார், எட்டாம் வகுப்பு, டி.வி.எஸ். மெட்ரிக் மே.நி.பள்ளி, மதுரை

1131. ரா. ஹரிகிருஷ்ணன், ஆறாம் வகுப்பு, கே.ஜி.பி மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

1132. பி. அறிவுமதி, மூன்றாம் வகுப்பு, செயின்ட் ஜான் மெட்ரிக் பள்ளி, கூடுவாஞ்சேரி.

1133. ஜா. கவியரசன்,ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1134. கே. பவித்ரன், முதல்வகுப்பு, பாரதிதாசன் மெட்ரிகுலேஷன் பள்ளி, காஞ்சிபுரம்

1135. க. பிரபு, ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1136. ச. அமலவினி, எட்டாம் வகுப்பு, புனித ஜோசப் கான்வென்ட் மே.நி.பள்ளி, கன்யாகுமரி

1137. கு.இரா.சந்தோஷ் குமார், ஒன்பதாம் வகுப்பு, தாகூர் வித்யாலயம் மேலவை மே.நி.பள்ளி, மதுரை

1138. இரா. காயத்ரி, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மே.நி.பள்ளி, பெரம்பலூர்

1139. பா. அரவிந்த் குமார், எட்டாம் வகுப்பு, ஸ்ரீனிவாசா வித்யாலயா, உடுமலைப்பேட்டை.

1140. ரா.பாலச்சந்தர், ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்.

1141. இரா.சபரிச்செல்வன், ஏழாம் வகுப்பு, பி.கே.மழலையர் தொடக்கப்பள்ளி, பெரம்பலூர்

1142. ஆர். சத்தியமூர்த்தி, நான்காம் வகுப்பு, பி.கே.மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி, நம்பியூர்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1143. ந. திருமூர்த்தி, ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப்பள்ளி, நம்பியூர்

1144. எஸ். முருகேசன், எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உயர்நிலைப்பள்ளி, தேனி

1145. எஸ். ஞானசேகரன், ஏழாம் வகுப்பு, திருக்கழுக்குன்றம்



1146. மா. கதிர்வேல், நான்காம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, செட்டிபாளையம்

1147. ஏ.ஜெ.டேனி, முதல் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநெல்வேலி

1148. ஏ.ஜே. கிராலிசா, நான்காம் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநெல்வேலி

1149. சி. அர்ஜுன், ஐந்தாம் வகுப்பு, எடிசன் ஜி. அகோரம் மெமோரியல் பள்ளி, சிதம்பரம்

1150. பி.ஜெகன்குமார், ஆறாம் வகுப்பு, ருக்மணி அம்மாள் மே.நி.பள்ளி, பொள்ளாச்சி

தலைமை அமைச்சராக விளங்கிய உக்கா என்பவர் புத்தரிடம் சென்று, "ஆபத்தில்லாத செல்வங்கள் உள்ளனவா?" என்று கேட்டார்.

அதற்குப் புத்தர், "ஆபத்தில்லாத ஏழு செல்வங்கள் உண்டு. அவை நல்ல நம்பிக்கை, நல்லொழுக்கம், மனசாட்சி, பழிக்கு அஞ்சுதல், நல்ல கல்வி, பெருந்தன்மை, அறிவு ஆகியவை" என்றார்.

- பி. சர்வேஸ்வரன்,
உ.எண். 456, மதுரை - 1

● நோபல் பரிசை வென்ற ஐரோப்பியர் அல்லாத முதல் மனிதர் இரவீந்திரநாத் தாகூர்.

● சமாதானத்தைக் குறிக்க வெண் புறா சின்னத்தை வரைந்த முதல் ஓவியர் பாப்லோ பிகாஸோ.

● சேமிப்பதில் அக்கறை உள்ள தொழிலாளர்கள் உள்ள நாடு சுவிட்சர்லாந்து.

● 'நீல நகரம்' என்று குறிப்பிடப்படும் ராஜஸ்தான் நகரம் - ஜோத்பூர்

● எகிப்தியர்களும், கிரேக்கர்களும் காளானைக் கடவுளின் உணவு (Food for the God) என்கிறார்கள்.

- ஆர்.எஸ். லக்ஷ்மி, மதுரை - 20



ஒரு நிமிட

● லிமா என்பது ஒருவகை காய். இது, பீன்ஸ் பிரிவைச் சேர்ந்தது. இதைச் சாப்பிட்டால் ஆள் காலிதான். காரணம் இயற்கையிலேயே இதில் மிகக் கொடிய விஷமான 'சைனட்' உள்ளது என்கிறார்கள்.

- கோடாவிளை த.அருள்,
திசையன்விளை

● மனிதனை, 'இறகுகள் இல்லாத இரண்டு கால் மிருகம்' என்று வர்ணித்த அறிஞர் - பிளேட்டோ

● புலிகள் கடுமையான சூரிய ஒளியை விரும்புவது கிடையாது. அது போல் வெள்ளையாக எதைப் பார்த்தாலும் புலிக்கு பயம் ஏற்பட்டு விடும்.

● சிறுத்தை நீரைக் கண்டால் கூச்சப் பட்டதுபோல் ஒதுங்கிவிடும்.

● யானைக்கு துதிக்கையில் காயம் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக ஆறவே ஆறாது. கட்டுக் கடங்காமல் போய் விடுமாம்.

● பம்பா என்னும் ஒரு வகைப் பாம்பு உள்ளது. இது மணிக்கு 11 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது.


மின்வெட்டு!

● தேனீக்கள் கொடுக்கினால் கொட்டுகின்றன என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஒருவகை தேனீக்களுக்கு கொடுக்குகள் இல்லை.


- ம. விவேக், திருநெல்வேலி

● அமெரிக்காவில் ஆண்டுக்கு ஒருமுறை ஒரு நிமிடம் மட்டும் மின் சாரம் நிறுத்தப்படும். இருளை விரட்டும் மின் விளக்குகளைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனின் நினைவாக, அவர் நினைவு நாளன்று நடக்கிறது இந்த ஒரு நிமிட மின்வெட்டு!

சு. அபிஷேக்,
உறுப்பினர் எண் - 518


* தாமஸ் ஆல்வா எடிசன்


* பிகாசோ





* 'லிமா' பீன்ஸ்

அழகான



கோழி ஒன்று
முட்டையிட்டு
குஞ்சு பொரித்தது;
குஞ்சு உடன் வெளியில்
வந்து உலகைப் பார்த்தது!
கோழி அதை சிறகில் மூடி
வளர்த்து வந்தது;
குஞ்சை யாரும்
நெருங்கிடாமல்
பார்த்துக் கொண்டது!

கோழிக்குஞ்சு



நெடுங்கவிதை.

வட்டமிடும் வல்லூறு
குஞ்சைப் பார்த்தது;
வரும் கருடன்
பருந்தெல்லாம் பிடிக்கப்
பார்த்தது;
நட்டநடு நிசியினிலே
நாகம் வந்தது;
நாள் பொழுதாய்
ஆபத்துகள் தேடி வந்தன.

குஞ்சுக்காக கோழி
என்றும் விழித்திருந்தது;
கோடி இன்னல் வந்தபோது
காத்து நின்றது!
அஞ்சிடாமல் எதனை
எதிர்த்தும் சண்டையிட்டது;
அழகான குஞ்சுதனக்கு
இரையைக் கொடுத்தது!

அழுவதினால் ஆபத்துகள்
விலகுவதில்லை;
ஆபத்துக்கு அஞ்சி நின்றால்
வாழ்க்கையும் இல்லை.
அழகான கோழிக்குஞ்சு
அழுவதுமில்லை;
அதைப் போல நாமிருந்தால்
துன்பமும் இல்லை!

பசு.தனபாலன்,சேலம்.

தெரியுமா!

1) இங்கிலாந்து நாட்டிலுள்ள 'ஷ்ரூஸ்பரி' என்ற ஊரில் 12.02.1809ல் பிறந்தவர்.

2. தாவரம் குறித்த ஆராய்ச்சியிலேயே தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டவர்.

3. தனது சகோதரர் வைத்திருந்த பரிசோதனைக் கூடத்துக்கு அடிக்கடி சென்று விஞ்ஞானப் பரிசோதனைகளில் ஆர்வம் காட்டியவர்.

4. எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பு படித்தவர்.

5. செடி, கொடிகள், பூச்சிகள், வண்டுகள் ஆகியவற்றினை சேகரிப்பது இவரது பொழுதுபோக்கு.

6. ஆராய்ச்சிக்காக அடிக்கடி கப்பல் பயணம் மேற்கொண்டவர்.

7. கப்பல் பயணம் இவரது வாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது. தவிர, உயிர்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிக்கு இது மிகவும் உதவிகரமாக விளங்கியது.

8. குரங்கிலிருந்து தோன்றியவன்தான் மனிதன் என்பதை உலகுக்கு உணர்த்தியவர்.

9. 43 வயதுவரை மட்டுமே வாழ்ந்த அற்புத விஞ்ஞானி.

10. 19.04.1852ல் மறைந்த விஞ்ஞானி இவர்.

இவர் யார்? டார்வின்

இவர் யார்?

- ஜெ. சாரதா,
உறுப்பினர் எண். 973,
ஒன்பதாம் வகுப்பு,
அ.ம.உ.பள்ளி,
கோட்டூர், மன்னார்குடி, கூற்றம்



திசைதோறும் திருவிழா!

கௌதம் ராம்

திருவிழாக்கள், மன மகிழ்ச்சி கொள்ளவும், உறவுகளைப் பேணவும், ஏழைகளுக்கு உதவி செய்யவும் வாய்ப்புகளை வழங்குகின்றன. உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் பல்வேறு வகையான பண்டிகைகளைக் கொண்டாடி குதூகலிக்கிறார்கள். அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

- ஆரம்பத்தில் ஏசு கிறிஸ்து பிறந்த தேதி எது என சரியாகத் தெரியாமல் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு நாளில் கிறிஸ்துமஸ் கொண்டாடிக் கொண்டிருந்தன. கி.பி. 336 முதல் டிசம்பர் 25ஆம் தேதி கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுவதாகத் தெரிய வருகிறது. 'குட் ஃப்ரைடே' எனப்படும் புனிதவெள்ளியன்று யேசு சிலுவையில் அறையப்பட்டார். எனவே, அதனைக் குறிக்கும் வகையில் கிறிஸ்தவர்கள் விரதமிருந்து, பிரார்த்தனை செய்வதும், யேசு உயிர்த்தெழுந்த அடுத்த மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமையை 'ஈஸ்டர்' என்ற பெயரில் கொண்டாடுவதும் அவர்களது மரபு.

- இஸ்லாமியர்களின் காலண்டரில் ஒன்பதாவது மாதமான ரமலான் மாதம் முழுவதும் அவர்கள் பகலில் நோன்பு இருப்பர். அவர்களின் புனித நூலான குரான், இந்த மாதத்தில்தான் அருளப்பட்டது. அவர்களது இன்னொரு முக்கிய பண்டிகை பக்ரித். இறைவனது கருணைக்கு நன்றி தெரிவிக்கும் நாள் 'பக்ரித்.'

- மே மாதம் முதல் தேதி, உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர்கள், பேரணி நடத்தி தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்துவது வழக்கம். குறிப்பாக, சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் இருக்கும் டினாமென் சதுக்கத்தில் நடைபெறும் பேரணியைப் பார்ப்பதையும், அதில் கலந்து கொள்வதையும் சீனாவின் ஒவ்வொரு தொழிலாளரும் பெருமைக்குரிய விஷயமாகக்



✱ இன்டி-ரியாமி, பெரு



✱ பிரேஸில் - புத்தாண்டு விழா



✱ பெல்டன் தீ திருவிழா

கருதுகிறார்கள்.

● 1564ல், ஏப்ரல் 23ஆம் தேதி இங்கிலாந்தில் உள்ள ஸ்டிராட் ஃபேண்ட்-ஆன்-ஆவொன் என்ற இடத்தில் பிறந்த ஷேக்ஸ்பியர் 52 ஆண்டுகள் வாழ்ந்து 1616ல், அதே ஏப்ரல் 23ஆம் தேதியன்று மரண மடைந்தார். அவரை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அந்த ஊரில் ஏப்ரல் டிசம்பர் வரை 'ஷேக்ஸ் பியர் திருவிழா' வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது.

● ஜெர்மனி இசைப் பாரம்பரியம் கொண்ட நாடு. ஜெர்மனியில் அக்டோபர் மாதம் நடைபெறும் அறுவடைத் திரு விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கோலாகலமாகப் பங்கேற்று மகிழ்கிறார் கள்.

● எடின்பரோ நகரத்தில் ஒவ்வொரு ஆண்டும் 30ஆம் தேதி நடக்கும் குளிர் காலத் திருவிழாவுக்கு 'பெல்டன் தீ திருவிழா' என்று பெயர். பூமி, தண்ணீர், காற்று, தீ ஆகிய நான்கிற்கும் முக்கியத் துவம் அளிக்கப்படும் இந்தத் திருவிழா வின் ஊர்வலம் மிகவும் பிரம்மாண்ட மானது. விசித்திரமான ஆடைகள் அணிந்து, உடல் முழுவதும் வண்ணம் பூசி, தீப்பந்தங்கள் ஏந்தி நடனமாடியபடி பலரும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள் வார்கள். இரவு முழுவதும் தீயின் வெளிச்சத்தில் மக்கள் நடனமாடி மகிழ்வார்கள்.

● பிரேசில் நாட்டில் டிசம்பர் 31ஆம் தேதி ரொயோ-டி-ரெஜிரோ நகரில் கூடி கடல் தேவதையான யமஞ்சா வழிபாடு செய்வார்கள். வண்ண மலர்களை கடலில் தூவி, கடல் தேவதையை வழிபட்டால்,

தேவதை அகமகிழ்ந்து கடலில் மீன் வளத்தை அள்ளித் தருவார் என்பது அங்குள்ள மீனவ மக்களின் நம்பிக்கை.

● இந்தியாவிலிருந்து மேற்கு இந்திய தீவுகளுக்குச் சென்ற இந்திய வம்சாவளியினர் இன்றும் அங்கே வண்ணமிகு ஹோலி பண்டிகையை 'பாக்வா' என்ற பெயரில் கொண்டாடு கிறார்கள்.

● வியட்நாமின் புத்தாண்டு கொண் டாட்டத்துக்கு டெட் ஏ'று பெயர். இந்தப் பண்டிகையின்போது மக்கள் தங்கள் வீடு களுக்கு முன் ஒரு உயரமான கம்பத்தை நட்டு வைப்பது வழக்கம். அந்தக் கம்பம், தீய சக்திகளை வீட்டுக்குள் நுழையாமல் தடுத்து நிறுத்தி, நடப்பவை நல்லவையாக இருக்கும்படிச் செய்யும் என்பது நம்பிக்கை!

● இந்தியாவின் தசரா விழாவுக்கு, நேபாளத்தில் தசைன் என்று பெயர். கி.பி.869ல், ஜப்பானின் கியோட்டோ நகரில் பெரும் தொற்றுநோய் பரவியது. ஜப்பான் மன்னர் கியோட்டோ நகருக்குச் சென்று கியோன் கடவுளை மனம் உருகி வழிபட, நோய் சீக்கிரமே நீங்கியது. அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் கியோட்டா நகரத்தில், கியோன் கோவிலில் கியோன் திருவிழா நடை பெற்று வருகிறது.

● நைஜீரியாவில் இக்பூ இன மக் கள், அறுவடை சீசன் முடியும் சமயத்தில் பூமித்தாய்க்கு மரியாதை செய்யும் 'நியூ யாம்' திருவிழா; கெயானில் நடக்கும் இளை ஞர் திருவிழா 'யுனோடா', பெரு நாட்டில் நடைபெறும் இன்டி- ரியாமி என்னும் சூரி யன் திருவிழா, மங்கோலியாவில் நடக் கும் நடாம் திருவிழா... என்று, திரு விழாக்கள் அனைத்துக்குமே மகிழ்ச்சி, உறவு பேணுதல், இறைவன் மற்றும் இயற்கைக்கு நன்றி சொல்வது ஆகிய வையே நோக்கமாக அமைகின்றன. ○

* டெட் திருவிழா, வியட்நாம்



* நடாம் திருவிழா, மங்கோலியா



கரை சேர்ந்த கதை!

கதை : ராகுல் | குழந்தைக் கடவுள்கள் - 9 | படம் : சொக்கலிங்கம்




வேலைக்கு உடலில் பலமில்லை; வாழ்ந்து என்ன பயன்?
மனம் வருந்தி...
எழுந்து கடலில் இறங்கினார்...
இதென்ன... வெகுதூரம் வந்தும் முழங்காலுக்கு மேல் நீர் இல்லையே...
நில்லுங்கள்...
யார் அழைப்பது? என்னையா?
கரையில் ஒரு சிறுவன்...
கடலில் மூழ்கும் அளவுக்கு என்ன கவலை? கரைக்கு வாருங்கள் முதலில்!
முன்பு போல் சமைக்க முடியலை...



கடற்கரையில்...
உங்களுக்குத்தான் வேறு வேலை இருக்கிறதே?
வேறு வேலையா? சமையலைத் தவிர எனக்கு வேறொன்றும் தெரியாதே?
ம்... பல காலமாக இங்குதானே இருக்கிறீர்கள்.
ஆமாம்!
திருச்செந்திலின் தலபுராணம் தெரியுமா?
ஓரளவு தெரியும்.
சரி; தெரிந்து கொண்டு தல புராணத்தை எழுதுங்கள். இதோ ஊதியம்!
விளையாடாதே... எனக்கு கவிதை எழுதத் தெரியாது.
நீர்தான் பாட வேண்டும்; இனி உம் பெயர் வென்றிமாலை கவிராயர்!
ஆ... இதென்ன விளையாட்டு?
முதியவர் அதிர்ச்சியடைய...


முருகன் தோன்றினான்...
செந்திலாண்டவா... உன் தரிசனம் கிட்டியது எவ்வளவு பேறு...
தலபுராணத்தை எழுதும் துணிவு ஏற்பட்டது அவருக்கு.
கிருஷ்ண சாஸ்திரி சொல்ல...
சூரனை வதைத்து ஈசனை வழிபட்ட தலம்...
சாஸ்திரிகள் விளக்க கவனமாகக் கேட்டுக் கொண்டார்.
முருகனை வணங்கி எழுத ஆரம்பித்தார்...
எழுதி முடித்து, அர்ச்சகரிடம் தர...
படிக்கத் தெரியாத நீர் புராணம் எழுதினீரா ஹா ஹா ஹா
மனம் நொந்து...
என்னை மன்னித்து விடு முருகா!
எழுதிய ஏடுகளை கடலில் போட்டார்.
அடுத்த ஊர் கடற் கரையில் ஒருவர்...
அட... செந்தில் தல புராணம் வென்றிமாலை கவிராயர்!
திருச்செந்தூரை அடைந்து அர்ச்சகர்களிடம் தர...
பிரமித்துப் போனார்கள். கவிராயரை அடைந்து...
முருகா... இதுவும் உன் கருணை!
கவிராயரே... எங்களை மன்னியுங்கள்!
முருகன் புன்னகைத்தான்.

விக்கல்,

டாக்டர் கு.கணேசன்

சாதாரணமாக நாம் சுவாசிக்கும்போது காற்றை உள் இழுக்கிறோமல்லவா? அப்போது மார்புத்தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் சுவாசப்பைகளை ஒட்டி உள்ள உதரவிதானமும் விரிகிறது. உடனே தொண்டையில் உள்ள குரல் நாண்கள் திறக்கின்றன. இப்போது மார்புக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதேநேரம் மார்புக்குள் காற்று எளிதில் செல்ல அதிக இடம் கிடைக்கிறது. இதனால் நாம் சுவாசிக்கும் காற்று, திறந்த குரல்நாண்கள் வழியாக தங்கு தடையின்றி சுவாசப்பைகளுக்குள் நுழைந்து விடுகிறது. இது இயல்பாக நிகழும் சுவாச நிகழ்வு.

சில நேரங்களில் மார்புப் பகுதியில் உள்ள நரம்புகள் உதரவிதானத்தைத் தூண்டினால், அது தன்னிச்சையாகச் சுருங்கி விரியும். அப்போது குரல்நாண்கள் சரியாகத் திறப்பதில்லை. அம்மாதிரி நேரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று தொண்டையில் உள்ள குறுகிய இடைவெளி வழியாக சுவாசப் பைகளுக்குள் நுழைய வேண்டியதிருக்கிறது. அப்போது அக்காற்று, புல்லாங்குழலில் காற்று தடைபடும்போது இசையொலி உண்டாவதைப் போல, தொண்டையில் 'விக்..' என்று ஒரு வினோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்' (Hiccough)



என்ன காரணம்?

விக்கல் வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவசர அவசரமாக உணவு சாப்பிடுவது, அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது, மிகச் சூடாகச் சாப்பிடுவது, தேவையான அளவுக்குத் தண்ணீர் அருந்தாதது. தவிர, புரதச் சத்துள்ள உணவுகளைக் குறைத்துச் சாப்பிடுதல், கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அதிகமாகச் சாப்பிடுதல் போன்ற காரணங்களாலும் விக்கல் வரலாம்.

சிலருக்கு மனநோய் காரணமாகவும் விக்கல் வரும். இதற்கு 'ஹிஸ்டிரிக்கல் விக்கல்' என்று பெயர். இவையெல்லாம் சாதாரண காரணங்கள். இதனால் அவ்வளவாக பாதிப்பு ஏற்படுவதில்லை.

இரண்டு மூன்று நாட்களுக்கு மேல்

ஒருவருக்கு விக்கல் தொடருமானால் அதை உடனே கவனிக்க வேண்டும். ஏனென்றால், சிறுநீரகம் பழுதாகி ரத்தத்தில் யூரியா அளவு வரம்பு மீறுதல்; உதரவிதானத்தில் நோய்த்தொற்று, இரைப்பைப் புண்... போன்றவையாக இருக்கலாம்.

விக்கலை நிறுத்த என்ன வழி?

ஒருவருடைய ரத்தத்தில் கரியமில வாயுவின் அளவை அதிகரித்தால் விக்கல் நின்றுவிடும். அதற்கு என்ன செய்வது?

விக்கலால் அவதிப்படும் நபரை நாற்காலியில் அமைதியாக அமரச் செய்யுங்கள். அவரை மூச்சை நன்றாக உள் இழுக்கச் செய்து, 20 எண்ணும் வரை மூச்சை நன்றாக அடக்கிக் கொள்ளச் சொல்லுங்கள். பிறகுதான் மூச்சை வெளியில் விட வேண்டும். இவ்வாறு 5 முறை செய்தால் விக்கல் நின்றுவிடும்.

இன்னொரு வழி இது. ஒரு காகிதப் பையை எடுத்துக்கொண்டு, மூக்கு, வாய் இரண்டும் உள்ளே இருக்குமாறு இறுக்கிப் பிடித்துக் கொள்ளச் சொல்லுங்கள். இப்போது மூச்சை உள்ளிழுத்து, அக்காகிதப்பைக்குள் மூச்சை விடச் சொல்லுங்கள். பிறகு அந்தக் காற்றையே மீண்டும் சுவாசிக்கச் சொல்லுங்கள். இவ்வாறு 20 முறை செய்தால் படிப்படியாக ரத்தத்தில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்து, பிராண வாயுவின் அளவு குறையும். அப்போது விக்கல் நின்று விடும்.

தண்ணீர் குடிப்பது; ஆரஞ்சுப் பழச் சாறு குடிப்பது; ஏதேனும் ஒரு வகையில் தும்மலை உண்டாக்குவது... இவை விக்கல் நிற்கச் சில வழிகள்! குழந்தைகளுக்கு கிரைப் வாட்டர் கொடுத்தால் விக்கல் நிற்கும்.



புரையேறுதல் ஏன்?

புரையேறுதல்:

உணவு உண்ணும்போது தொண்டையிலிருந்து இறங்கும் உணவு திடீரென்று சுவாசக்குழலில் சிக்கிக் கொள்வதைப் 'புரையேறுதல்' என்கிறோம். அவசர அவசரமாக உணவை விழுங்குவது, பேசிக்கொண்டே உணவு உண்

பது, உணவு உண்ணும்போது சிரிப்பது, தும்முவது... இவை தவிர, உணவுக் குழாய்ப் புற்றுநோய், தொண்டை நரம்பு வாதம்... போன்ற காரணங்களாலும் புரையேறும்.

என்ன செய்ய வேண்டும்?

பாதிக்கப்பட்ட நபரை அழுத்தமாக இருமச் சொல்லுங்கள். சிலமுறை இருமினாலே பெரும்பாலான உணவுப் பொருள்கள் உடனே வெளியேறிவிடும்; இதில் குறையாவிட்டால், அந்த நபரை நிற்க வைத்து, முன்னோக்கி நன்றாக வளையச் சொல்லுங்கள். இப்போது நீங்கள் அவரது முதுகை நான்கைந்து முறை ஓங்கித் தட்டுங்கள்.

இன்னொருமுறை: அந்த நபரை நின்று கொண்டு குனியச் சொல்லுங்கள். அவரது பின்புறம் நீங்கள் நின்று கொள்ளுங்கள். உங்கள் இரு கைகளையும் அவரது வயிற்றுக்கு முன்பாக இணைத்து, அவரது விலா எலும்புகளுக்குக் கீழே வைத்து, உள் நோக்கியும் மேல்புறமாகவும் வலுவாக அழுத்தம் கொடுங்கள். உணவுப் பொருள் வெளியேறும்வரை முதுகில் தட்டுவதையும் வயிற்றில் அழுத்தம் கொடுப்பதையும் மாற்றி மாற்றி செய்யுங்கள். உணவுப் பொருள் வெளியேறிவிடும்.

இதிலும் உணவுப்பொருள் வெளியேறவில்லை என்றால், உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கு 'மூச்சுக் குழல் அகநோக்கி' (Broncho-scope) மூலம் உணவுப்பொருளை வெளியே எடுத்து விடுவார் மருத்துவர். ○



வின்னர்ஸ்

விடையைச் சொல்; பரிசை வெல் - 23ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள்:

1. தொரப்பள்ளி, 2. பிரான், 3. இன்சோம்னியா, 4. ஹென்ரி தூனான்ட், 5. ஜாக்கிமன்

பரிசு பெறுவோர்:

1. வி.சீ.யுக்கேஸ், ஆட்டையாம்பட்டி, 2. எம். பிரவீன், தஞ்சாவூர், 3. ஜா.ஜோசப் ரெனால்டு, ஆலந்தலை, 4. ந.பிரதீப்குமார், சென்னை, 5. ஜோ.ஸ்தோ வின் டெல்பிக்ளாரா, புதுப்பாளையம் 6.எஸ்.மருதநாதன், கோயில் சிங்களாந்தி 7.கே.கவிதா, ஆற்காடு,8. ப.ரவிச் சந்திரன், பு.புளியம்பட்டி, 9. பி.கோபி, கன்னியாகுமரி 10. சு.தேவகுமாரி, அறந்தாங்கி

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!

புதிய முயற்சி!

பொன்னியின் செல்வன் (சிறுவர்களுக்காக) எளிமைப்படுத்தியவர்: இரா. கற்பகம், வெளியீடு: விஜயா பதிப்பகம், 20. ராஜவீதி, கோயம்புத்தூர் - 641001. தொலைபேசி 0422-2394614/ 2382614. விலை ரூ.225/-

வரலாற்றுப் புதினம் என்றவுடன் நினைவுக்கு வருவது அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன். வெறும் கதையாக மட்டுமின்றி, அந்தக் காலத்தில் நிலவிய சமூகச் சூழல், மக்களின் வாழ்க்கை நிலை, பண்பாடு, மன்னர்களின் தன்மை, பட்டயங்கள் மற்றும் கல்வெட்டுகளில் காணப்படும் தகவல்கள்... என்று ஆதாரங்களின் அடிப்படையில் - கற்பனையும், வரலாறும் கைகோத்து நடந்த உரைநடைக் காப்பியம் இது.

ஐந்து பாகங்களாக அமைந்த அந்த நூலை தமிழ் படிக்கத் தெரிந்த அனைவருமே படித்திருப்பார்கள் என்று நம்பலாம். அந்த நூலை, இன்னும் எளிமைப்படுத்தி, சிறுவர்களும் வாசிக்கும்படி ஒரே நூலாக வடிவமைத்திருக்கிறார் நூலாசிரியர். மூல நூலின் அழகு கெடாமலும், செய்திகள் விட்டுப் போகாமலும் அழகாகச் செதுக்கியிருக்கிறார் என்பது ஆசிரியரின் திறமைக்குச் சான்று.

இம்மாதிரியான நூல் தமிழில் புதிய முயற்சி! சுமார் 432 பக்கங்களில் ஐந்து பாகங்களையும் தொடர்ச்சி மாறாமல் தொகுத்திருக்கும் ஆசிரியரின் பணி பாராட்டுக்குரியது. எளிய நடையில், அரிய பணி!





இது உங்கள் குழந்தைக் கான மகாபாரதம் - ஜயா சந்திர சேகரன், வெளியீடு: வரம், நியூ ஹாரிசன் மீடியா பிரைவேட் லிமிடெட், எண்: 33/15, எல் டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை-18, தொலைபேசி: 044- 42009801/ 03/04, விலை ரூ.70/-

'ஐந்தாவது வேதம்' என்று கொண்டாடப் படும் மாபெரும் இலக்கியம் மகாபாரதம். வியாசர் எழுதிய இந்தப் பெருநூலை குழந்தைகளுக்குப் புரியும் விதத்தில், பேச்சு நடையில் - மிகச் சுருக்கமாக 26 அத்தியாயங்களில் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். புரியாத சொற்களை தவிர்த்தும், நடைமுறையில் குழந்தைகள் பயன்படுத்தும் வார்த்தைகளை, சரியான விகிதத்தில் பயன்படுத்தியிருப்பதும் சாதுர்யம்!

- ஆர்.எஸ்.ஆர்

திறக்காத பேனா!



எங்கள் தாவரவியல் ஆசிரியர் ரெகார்டு நோட் கொண்டுவரச் சொல்லியிருந்தார். மாணவிகள் அனைவருமே அவர் டேபிளில் அடுக்கி வைத்திருந்தோம். சற்று தாமதமாக வகுப்புக்கு வந்த அவர், 'ஸாரி' என்று சொல்லிவிட்டு, ரெகார்டு நோட்டுகளை, எடுத்து விறுவிறுவென்று திருத்த ஆரம் பித்தாள். அப்போது ஒரு மாணவி எழுந்து, ''சார்' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். உடனே ஆசிரியர் நிமிர்ந்து, 'ப்ளீஸ் வெய்ட், என்றபடியே அடுத்தடுத்த நோட்டுகளைத் திருத்த ஆரம்பித் தார்.



பொதுத்தேர்வுக்கு முந்தைய வாரம்... ஒவ்வொரு வகுப்பாகச் சென்று, பொதுத்தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களுக்கு துணிவூட்டியும், உற்சாகப்படுத்தியும் பேசிக்கொண்டு வந்தார் தலைமை ஆசிரியர்.

''ஒரு ஆண்டு முழுவதும் நீங்கள் படித்ததில் இருந்துதான் எழுதப் போகிறீர்கள். எனவே, அதில் பயப்பட வேண்டியதில்லை.

டுடோரியலுக்குப்

கவலையும் வேண்டாம். தெரிந்ததை தெளிவாகவும், குறிப்பிட்ட நேரத்துக்குள்ளும் எழுதுங்கள். அதனால் நீங்கள் பெரும் வெற்றி பெறுவீர்கள். அது உங்களுக்குப் பெருமை; உங்களின் பெற்றோருக்குப் பெருமை; நீங்கள் பயின்ற பள்ளிக்குப் பெருமை; உங்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்குப் பெருமை!'' சொல்லிக் கொண்டே வந்த தலைமை ஆசிரியர், ஒரு

சிறிது நேரத்தில் மீண்டும் அந்த மாணவி 'சார்' என்றாள். ஆசிரியருக்கு கோபம். 'சொன்னது உனக்கு கேட்கலையா? திருத்தி முடிச்சுட்டு வரேன்' என்றார் வேகமாக. உடனே அந்த மாணவி, 'சார், நீங்க பேனா மூடியைக் கழற்றவே இல்லை ' என்றாள் பதிலுக்கு. அதன்பிறகு அதைக் கவனித்த ஆசிரியர், 'ஓ... அதுக்குத்தான் கூப்பிட்டியா, நல்ல வேளை....'' என்று வாய்விட்டுச் சிரித்தார். வகுப்பு களை கட்டியது.

- ர. செல்வபவானி,
பன்னிரண்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் மே.நி.பள்ளி,
சேலம்

மாணவி ஏதோ யோசனையில் இருப்பதைக் கவனித்துவிட்டுக் கேட்டார்: 'என்ன யோசிக்கிறாய்?''

''ஒன்றுமில்லை சார், எல்லோரும் பள்ளிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்தால், ஊரில் இருக்கின்ற டூடோரியல் காலேஜூக்கு யார் பெருமை சேர்ப்பது?' என்று யோசித்தேன்'

பெருமை!

என்றாள் அமைதியாக. அந்தச் சூழலில், அந்த மாணவியின் குறும்புக் கேள்வி தலைமை ஆசிரியர் உட்பட அனைவரையும் கலகலப்பாக்கிவிட்டது.

- ஜி.சாயிலட்சுமி, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மெட்ரிக் பள்ளி,
திருநெல்வேலி

ஸ்கூல் கலாட்டா!

எங்கள் பாட்னி மேடம் முழு ஆண்டு தேர்வு ப்ராக்டிகல் தேர்வுக்காக சில குறிப்புகளைக் கூறினார். இதற்காக மேடம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளை எடுத்துக்கொண்டு வரவும்' என்று கூறினார். குறிப்பாக, 'தக்காளி (பெர்ரி)யை ஒரு மாணவரும், மாம் பழத்தை (ட்ரூப்) ஒரு மாணவரும், எலுமிச்சை (ஹெஸ்பிரியம்)யை இன்னொருவர் என்று ஒவ்வொரு வகையையும்

பலாப்பழம் கொண்டுவா!

பிரதிபலிப்பதுபோல, வெவ்வேறு பொருள்களைக் கொண்டு வாருங்கள்' என்றார் அவர். உடனே, ஒரு மாணவன் எழுந்து, ''மேம் இவன் பலாப்பழம் எடுத்துக் கொண்டு வர்றானாம்'' என்று கூறினான். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். குறும்பாகத்தான் அவன் சொன்னான் என்றாலும், அது கூட்டுக்கனி வகையைச் சேர்ந்தது. 'சரி, நீயே கொண்டு வா' என்றார் ஆசிரியை. குறும்பு செய்யப் போய் சிக்கிக் கொண்ட மாணவனும் அசடு வழியச் சிரித்தான்.

- எஸ்.தணிகைவேல்,
உ.எண். 762,
காஞ்சிபுரம்




குருவும் சீடனும்!
கதை: புதுவை சிறுத்தை.
படம்: தர்மா.
ஜமீன்தார் வீட்டில் நடந்த விருந்துக்கு கிளம்பினர் குருவும் சீடனும். வழியில்...
விருந்து நல்லா இருக்கும். ஒரு பிடி பிடிச்சடணும்.
ஆமா! ஏகப்பட்ட பலகாரம் போடுவாங்க. நிறைய சாப்பிடலாம்.
சாப்பாட்டு பந்தியில்...
அடடா... சாம்பார் ரொம்ப அருமை!
ம்... இன்னொரு வடை போடுங்க!
ஏம்பா... இங்க வா. சாமிக்கு இன்னொரு லட்டு போடு...
ம்... நல்லா இருக்கு. எனக்கும் போடுங்க.
பாயாசம் மிக ஜோர்...
ஆமாம்!
இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க!
அடடா... கட்டித் தயிர் மிக அபாரம்!
ம்... நல்லா இருக்கு...
இந்தாங்க... கையில வாங்கி சாப்பிடுங்க...
இப்படி ஒரு விருந்தை சாப்பிட்டதே இல்லை.
நீங்க வந்து சாப்பிட்டதுதான் எனக்கு பெரிய சந்தோஷம்?
உங்க மனசு மாதிரியே விருந்தும் அற்புதம்!
வெளியே வந்ததும் குனிய முடியாத குரு...
சிஷ்யா... செருப்பை காலில் மாட்டி விடு...
குருவே...உங்கள் செருப்பை ஆகாயத்தில் காணவில்லையே ஆச்சரியமல்லவா?
சீடனாலும் முடியவில்லை என்று புரிந்தது குருவுக்கு!
Dharma

கடிதமாலை!

‘வெற்றியின் விளம்பில்’ நின்று கொண்டு, ‘கடல்வழி கண்டவர்களை’ப் பார்த்தேன். இவ்விரண்டிலும் இடம் பெற்ற கண்டுபிடிப்புகள் எனக்கு Science Digest படித்ததுபோல் இனித்தது! மொத்தத்தில் பார்த்தேன், படித்'தேன், ரசித்'தேன் சுவையுடன்!

**- த. மௌரியா, உ.எண். 939
சோமையனூர், கோவை**

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிகாசோ, ஜார்ஜ் பெர்னாட்ஷா, வின்சென்ட் சர்ச்சில் ஆகியோர் வாழ்வில் நடந்த சம்பவங்கள் என்னைப் போன்று படிப்போருக்கு பயனுள்ளதாய் அமைந்திருந்தன.

**- டி.எம். சிவரஞ்சனி, உ.எம்.179,
ஸ்ரீ மகாதேவ குருஜி
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
வலங்கைமான்**

அட்டைப்பட சகோதரி ஹரிணியின் எதார்த்தமான தோற்றம் என்னை மிகவும் கவர்ந்தது.

**- ந. பிருந்தா, உ.எண். 1098, ராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை**

அணில்பிள்ளை - காயா பழமா, எங்கள் பாட்டி மூன்று கவிதைகளுமே கவிதைப் பூங்காவில் பழுத்த கனிகளாக ருசித்தன.

- ஆர்.கே.கார்த்திக், மணலிவிளை

‘‘நூற்றாண்டின் முதல் கழுகு’ கருத்து மிக்க அற்புதச் செய்தி. ‘ரகுவின் மனமாற்றம்’, ‘நட்பின் வண்ணம்’ மனத்தைத் தொட்ட அழகான ஆழமான கருத்துக் கதைகள் சிறப்பு! மருத்துவர்கள் எழுதும் Rx என்பதற்கு இலத்தீன் மொழியில் RECIP- எடுத்துக் கொள் என்ற பொருள் என்பதை தற்போது தான் அறிந்தேன்.

- ஆர். ஜானகிராமன், வேதாரண்யம்

முக்கனியில் மூன்றாவதைத் தரும் வாழை மரத்தின் பல்வகைக் கொடைப் பாங்கினைச் சித்தரிக்கும் ரா. கலைச் செல்வியுடைய நீள்பாடல்... நெஞ்சினை நிறைக்கிறது! பாராட்டுக்கள்.

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

கரடி போட்டி நகைச்சுவைத் துணுக்குகள் எல்லாமே ‘பூனைவேளை கரடி’யாக குபீர் சிரிப்பை வரவழைத்தன!

- உமா மோகன்தாஸ், திண்டுக்கல்-1



தேன் சுவை!

விடையைச் சொல்; பரிசை வெல் - 25

1. சமாதானத்தைக் குறிக்க வெண்புறா சின்னத்தை

   வரைந்தவர் ____________________

2. முதல் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரின் பெயர் ____________________

3. மலாய் மொழியில் 'டியுங்' என்ற சொல்லின் பொருள் ____________

4. 'செழுமையான நெல்வயல்' என்று பொருள்படும்

   ஜப்பானியச் சொல்____________________

5. காவிரியில் இருந்து கொள்ளிடம் பிரிகின்ற இடம் ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள் ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற் றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.7.2009

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1126


1127


1128


1129


1130


1131


1132


1133


1134


1135


1136


1137


1138


1139


1140


1141


1142


1143


1144


1145


1146


1147


1148


1149


1150

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்



without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 * Registered as a Newspaper in Srilanka